Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, [illegible] வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 19 (07.08.2004) சனிக்கிழமை இதழ்:309



## விசேட உந்துகணைப் படையணியின் அணிவகுப்பினை தலைவர் ஏற்றார்!

விசேட உந்துகணைப் படைப் பிரிவின் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்

விசேட உந்துகணைப் பயிற்சிகளை முடித்த புதிய படையணியின் அணிவகுப்பு நிகழ்வு நேற்று சிறப்புப் படைத்தளத்தில் இடம்பெற்றது. கேணல் தீபனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் - கேணல் தீபன், கேணல் விதுஷா ஆகியோருடன் இணைந்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அணிவகுப்பு நிகழ்வையடுத்து அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. அகவணக்கத்தையடுத்து விசேட படையணிப் போராளிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதனையடுத்து தமிழீழத் தேசியத் தலைவர் - போராளிகள் மத்தியில் சிறப்புரை நிகழ்த்தினார். இதில் சமகால அரசியல், இராணுவ நிலை குறித்து போராளிகளுக்கு எடுத்து விளக்கினார்.

இதையடுத்துப் பயிற்சி பெற்ற போராளிகளுக்கு சான்றிதழ்களையும் பயிற்சி வழங்கிய ஆசிரியர்களுக்கான பரிசில்களையும் தேசியத் தலைவர் வழங்கினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்ற

# தமிழீழ தேசியத் தலைவரே முதன் முதலில் சமாதான முயற்சியை ஆரம்பித்துவைத்தார்!

### தென்னிலங்கை பிரமுகர்களுடனான சந்திப்பில் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**கௌரவமான சமாதானத்தை விரும்பும் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தான் முதன்முதலில் – ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தத்தை அமுல்செய்து சமாதான முயற்சி களை ஆரம்பித்து வைத்தார் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் – கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தென்னிலங்கையின் சமாதானத்துக்கான பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது தெரிவித்தார்.**

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்றனர். சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்ததே எமது தேசியத் தலைவர்தான்.

ஒரு தலைப்பட்சமான போர் நிறுததத்தைப் பிரகடனப்படுத்தி நாகரிகமான முறையில் பேசி ஒரு

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வெலிகந்தையில் கருணா குழுஉறுப்பினர் சுட்டுக்கொலை

(பொலநறுவை)

கருணா குழுவுடன் தொடர்புடையவரெனக் கருதப்படும் இளைஞர் ஒருவர் பொலநறுவை மாவட்டம் வெலிகந்த பகுதியில் நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வெலிகந்த முத்துகல என்ற இடத்தில் நேற்றுக்காலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பூபாலபிள்ளை ஹரிகரன் என்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் பேசாலையில் இருவர் காயமடைந்தனர்!

(மன்னார்)

மன்னார் - பேசாலை முருகன் கோவிலடிப் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

பேசாலை முருகன் கோவிலடியைச் சேர்ந்த தையல் வேலை செய்யும் தர்மலிங்கம் முரளி (வயது-23) மீன்பிடித்தொழில் செய்யும் சேது இரவீந்திரன் (வயது-28) ஆகியோரே துப்பாக்கிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னாலையில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு!

### அடிப்படை உரிமை மீறல் வழக்கில் தீர்ப்பு

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பன்னாலைப் பகுதியில் திருஞானசம்பந்தர் என்பவரை மீளக்குடியமர அனுமதிக்கும்படி இராணுவத்தினருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

வலி வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பன்னாலையில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி அந்தப் பகுதியைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையில், யாப்பா, உடலாகம ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இந்த வழக்கு விசாரணையில் இராணுவத்தினரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, பன்னாலையில் இவர் மீளக்குடியமர்வதற்கு ஆட்சேபனை இல்லை என்றும், இவரது வீடு இராணுவ முகாமிலிருந்து 600 மீற்றருக்குள் இருப்பதால் அவருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா - விளக்குவைத்தகுளம் பகுதியில்

## தமிழீழ காவல்துறையினர் நேற்று கண்காணிப்புக்குழுவுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ காவல்துறையினருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று வவுனியா - விளக்குவைத்த குளம் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணித் தளபதி இரா.மகேந்தி, விளக்குவைத்தகுளம் பொறுப்பாளர் மாறன் ஆகியோரும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தரப்பில் கிருஸ்றின்லின்ட் மற்றும் கிளிங்டன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் வவுனியா விளக்குவைத்த குளம் முன்னரங்கக் காவலரண் பகுதியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், முன்னரங்கக் காவலரண்கள் தொடாபாக விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## மட்டக்களப்பில் ஈ.பி.டி.பீ. உறுப்பினர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான களுதாவளையில் நேற்றுக் காலை 11.15 மணியளவில் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறி மீன்பிடித்த 25 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது!

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த நான்கு படகுகளில் இருந்த 25 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணிக்கு அத்துமீறி மீன்பிடித்த இந்த 25 மீனவர்களையும் நான்கு படகுகளையும் கடற்படையினர் பிடித்து காங்கேசன்துறை பொலிஸாரிடம் கையளித்தனர்.

தமிழ்நாடு நாகபட்டினத்தைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க கடற்படைத் தளபதியின் குடாநாட்டு விஜயத்துக்கு எதிர்ப்பு!

## பொது அமைப்புக்கள் கண்டித்து அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் வலஸ் கி.கிறேக்சனின் யாழ்.விஜயத்துக்கு குடாநாட்டு பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இலங்கையில் நடைபெற்றுவந்த நீண்டகாலக் கொடிய யுத்தம் இன்று ஒரு தற்காலிக ஓய்வில் இருந்து வருகிறது. இந்தநிலையில், விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றினை வழங்க வேண்டும் என தமிழர் தரப்பு வலியுறுத்தி வருகின்றது.

இந்தவேளையில் - தென்னிலங்கையில், ஆட்சியில் இருக்கும் பிரதான ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள் வலுத்து வருகின்றன. தமிழர் தரப்பு வலியுறுத்தும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை ஏற்றுப் பேச்சு நடத்துவதாகவும், அதனை ஏற்றுக்கொள்வதில்லை என்றும் முரண்பாடுகள் ஏற்பட்டுவருகின்றன.

சர்வதேச சமூகத்திடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்றுத் தென் பகுதியை அபிவிருத்தி செய்யவும், இராணுவ பலத்தை அதிகரிக்கவும் அரசு தீவிர முயற்சி எடுத்து வருகின்றது.

பாரியதொரு யுத்தத்துக்கான தயார்ப்படுத்தலில் அரசு ஈடுபட்டு வருவதை அண்மைக்கால வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் வருகை உறுதிப்படுத்துகின்றது. குறிப்பாக, அமெரிக்க இராணுவப் புலனாய்வு அதிகாரிகளின் குடாநாட்டு வருகையும், இறுதியாக அமெரிக்க அரசின் கடற்படையின் பசுபிக் பிராந்தியத் தளபதியின் விஜயமும் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தம் பற்றியதொரு அச்சஉணர்வை அதிகரித்துள்ளது.

அண்மையில் அரசு செய்து கொண்டுள்ள துறைமுகங்கள் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம் - அவர் வருகைதந்து குடாநாட்டின் முக்கிய இராணுவத்தளங்களுக்கும், கடற்படைத்தளங்களுக்கும் சென்று கலந்துரையாடி வருகின்றார்.

அத்துடன், அவர் இங்குள்ள இராணுவப் புலனாய்வாளர்களுடன் சந்திப்பை நடத்தியுள்ளார்.

அமெரிக்க அரசு யுத்தத்தைத் தூண்டும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் சொந்த இடத்தைவிட்டு வெளியேறி நாளும் பல்வேறு பிரச்சினைகளுடன் அகதிவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மக்களின் வீடுகளை ஆக்கிரமித்துள்ள இராணுவம் அந்த இடங்களை ஒப்படைப்பதை விடுத்து அவற்றைப்பலப்படுத்தி வருகின்றது.

இன்று சர்வதேசம் தமிழ்மக்களின் கோரிக்கைகளை ஏற்று சமாதானப் பேச்சுக்குச் செல்லுமாறு அரசைத் தூண்டவேண்டும். நிரந்தர சமாதானம் நிலைக்க வேண்டுமானால் தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான சரியான தீர்வினை அரசு தமிழ்மக்களுக்கு வழங்கவேண்டும்.

அத்துடன், இதற்கான அழுத்தத்தினை அரசுக்கு அமெரிக்கா வழங்குவதையே தமிழ்மக்கள் விரும்புகின்றார்கள். மாறாக, அரசினதும் இராணுவத்தினதும் நலன்களை முன்னிலைப்படுத்தும் அமெரிக்க அரசின் இத்தகைய செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன், இத்தகைய செயற்பாடுகளை உடன்நிறுத்தி சமாதானப் பேச்சுக்கள் தொடர ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை - யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம், உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவகம், மாணவர் ஒன்றியம், பெண்கள் பண்பாட்டுமையம், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் உட்படப் பல்வேறு அமைப்புக்கள் இந்த விஜயத்தினைக் கண்டித்துள்ளன.

## குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறிக்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறிக்கான பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்குத் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து புவியியல், திட்டமிடல், பொருளியல், சமூகவியல், மானிடவியல், உளவியல், அரசியல் விஞ்ஞானம், கணிதம், புள்ளிவிபரவியல், சமூகம், சுகாதாரம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றினைப் பயின்று பட்டம் பெற்றவர்களிடமிருந்தும், குடிக்கணிப்புத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், சமூக நலத்திணைக்களம், நில அளவைத் திணைக்களம், திட்டமிடற்பிரிவுகளில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவமும் கொண்ட நிர்வாகத்தரப்பிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்தக் கற்கைநெறிக்கான விணணப்பப்படிவங்களை பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் பெற்று இந்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பீடாதிபதி பேராசிரியர் சபா ஜெயராசா கேட்டுள்ளார்.

# நீதிமன்றச் செய்திகள்

ஈ.பி.டி.பி உறுப்பினரை

## தாக்க உதவியவர் அடையாளம் காணப்பட்டார்!

முன்னாள் மாநகரசபை உறுப்பினரும், ஈ.பி.டி.பி உறுப்பினருமான றேகன் தன்னைக் குத்திக் கொலை செய்ய முயன்றவர்களில் ஒருவர் எனத் தெரிவித்து நேற்று யாழ்.நீதிமனறில் ஒருவரை அடையாளம் காட்டியுள்ளார்.

யாழ்.மாவட்ட நீதிமன்றில், யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுபபிலேயே ஒருவரை அடையாளம் காட்டினார்.

அடையாளம் காட்டப்பட்டவர் தன்னைத் துரத்திவந்து மடக்கிப்பிடித்தவர் எனவும், தன்னைக் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றவருக்கு உதவியவர் என்றும் தெரிவித்தார்.

தன்னைக் கொலை செய்ய முயன்றவர் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். இதனையடுத்து, கொலை செய்ய முயன்றவரைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

## வெடிமருந்து வைத்திருந்த நான்கு பேர் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி!

(யாழ்ப்பாணம்)

வெடிமருந்து வைத்திருந்ததாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று யாழ்.நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் இந்தப் பிணை அனுமதியை வழங்கினார்.

கடந்த மாதம் பாசையூர் பகுதியில் தமது மீன்பிடிப்படகில் ஒரு கிலோ கிராம் எடையுள்ள வெடிபொருள்களை வைத்திருந்த நால்வர் சந்தேகத்தின்பேரில் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீது உயிராபத்து விளைவிக்கும் பொருள் வைத்திருந்தமை என்னும் அடிப்படையில் பயங்கரவாதச் செயலில் ஈடுபட முனைந்தனர் என்று பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

எனினும், சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் வழக்கில் ஆஜரான சட்டத்தரணி ஸ்ரீகாந்தா இவர்களை வெடிபொருள் வைத்திருந்தமை தொடர்பான குற்றத்தின்கீழ் விசாரிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி அவர்களை பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

இவர்கள் ஒவ்வொருவரும் இருவரின் ஆட்பிணையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களது வழக்கு விசாரணை முடியும்வரை யாழ்.பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப்பிரிவு அலுவலகத்துக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று இவர்கள் கையொப்பமிட வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

சந்தேச நபர்கள் தமது மீன்பிடிப்படகைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டபோது, பொலிஸார் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து மீன்பிடிப்படகு ஒப்படைக்கப்படவில்லை.

(ப)

# வெடிபொருள் அகற்றிய பிரதேசங்கள் உதவி அரச அதிபரிடம் ஒப்படைப்பு!

சிறுப்பிட்டியில் 'ஹலோரஸ்ட்' வெடிபொருள் அகற்றும் பிரிவினரால், வெடிபொருள் அகற்றப்பட்ட ஒரு பகுதி நிலப்பரப்பு, பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

கோப்பாய் உதவி அரச அதிபர் இராசையாவிடம், யாழ்.மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இந்தப் பகுதியைக் கையளித்தனர்.

ஆயிரத்து 60 சதுர மீற்றர் பரப்பளவு நிலப்பகுதியே பொதுமக்களின் பாவனைக்காக தற்போது விடப்பட்டுள்ளது. இதேவேளை - மேலும் ஒரு தொகுதி நிலம் சிறுப்பிட்டிப் பகுதியில் 'ஹலோரஸ்ட்' வெடிபொருள் அகற்றும் பிரிவினரால், வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப்பகுதியும் விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு விடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - கடந்த மாதம் கற்கோவளப் பகுதியில் 16 மிதிவெடிகள் காணாமற்போனமையால், அங்கு வெடிபொருள் அகற்றும் கடமையில் ஈடுபட்டிருந்த 'டெனிஸ்' மிதிவெடி அகற்றும் பிரிவினர் தமது கடமைகளை இடைநிறுத்தியிருந்தனர்.

எனினும், பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருவதையிட்டு அவர்கள் மீண்டும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளார்கள்.

# யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் வெலிக்கடைக்கு இடமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் சிவபாதசுந்தரம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடம்மாற்றப்பட்டார்.

இவருக்கான இடமாற்றக் கடிதம் நேற்று இலங்கை சிறைச்சாலைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவரது இடத்துக்கு கிழக்கு மாகாணத்தில் சிறைச்சாலைகளில் கடமையாற்றிய இந்திரஜித் என்பவர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.சிறைச்சாலையின் பிரதம அதிகாரி சம்பந்தமாக யாழ்.நீதிமன்றில் இரண்டு வழக்குகளும், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில், சில மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்களும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# தீக்காயமடைந்த பெண் வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் அடுப்பு மூட்டிக் கொண்டிருந்தவேளை தவறுதலாக ஏற்பட்ட தீவிபத்தினால் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காததால் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது, மானிப்பாயைச் சேர்ந்த 52 வயதுடைய இ.மலர் என்பவரே உயிரிழந்தார்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

சமைப்பதற்காக அடுப்பு மூட்டிக் கொண்டிருந்த சமயம் எண்ணெய் விளக்கு தட்டுப்பட்டதால் மேற்படி நபர் மீது தீ பரவியது, அயலவர்களின் உதவியுடன், யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வந்த சமயம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அந்தப்பெண் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

# எச்-என்-டி-ஏ பட்டதாரிகளுக்கு விசேட கலந்துரையாடல்

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உயர் தொழில்நுட்ப பிரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகளை தற்போது பட்டதாரி நியமனத்தின் கீழ் கொண்டு வரமுடியாது எனத்தெரிவித்துள்ளமையை ஆட்சேபித்து அதற்காக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க வேண்டிய எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய மாவட்டத் தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பட்டம் பெற்று வெளியேறிய சகல எச்.என். டி.ஏ பட்டதாரிகளும் கலந்து தம்மை பதிவு செய்துகொள்ளுமாறும், தவறுபவர்களை எமது பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியாதநிலை ஏற்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி

(நெல்லியடி)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை ஊடாக நடத்தப்படும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி சனசமூக நிலையத் தலைவர் தி.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக உடுப்பிட்டி அமெரிகன் மிஷன் கல்லூரி அதிபர் கி.நடராசாவும், கௌரவ விருந்தினராக வடமராட்சி உரசியற்துறை பொறுப்பாளர் தயாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.(12)

A/L பரீட்சை முடிவுகளை
இணையத்தளம் மூலம்
பார்வையிடலாம்
திருமுருகன் கொம் நெற்
Opposite Dialog Phone Shop
259, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 7835
Fax 021 222 7836
பலநோக்கு கூ.ச.முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
T.P 021 222 7560
Fax 021 222 7310
(c/2918)
E.mail: thirumurugan 5@ lycosmail.com

The Royal College of Jaffna
ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.
Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி :
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)

நிறஞ்சனாஸ் சங்கானை
நந்தா, ரேகா, வடிவேல் நடித்த
புன்னகைப் பூவே
காட்சிநேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Saving Private Ryan
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
9 ஆம் திகதி முதல்
மாணிக்கம்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த
குத்து
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
சில தினங்கள் மட்டும்

# ஜனநாயக அரசியல் முறை மீதான மக்களின் நம்பிக்கை குறைகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



ஜனநாயக அரசியல் முறை தொடர்பாக மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கை தற்போது குறைவடைந்து வருகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் - தேர்தலுக்கு முன்னர் வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமா என்பது குறித்து, மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசசேவை தேசிய தொழிற்சங்கச் சம்மேளனத்தின் 31 ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்பொழுது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால், வேலை செய்யும் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதும், வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதும் இன்று இருக்கின்ற பிரச்சினையாகும்.

அரசாங்கம் மூன்று மாதங்களுக்குள், உறுதியளிக்கப்பட்டவாறு அரச ஊழியர்களின் மாதச் சம்பளம் எழுபது வீதத்தால் அதிகரிக்கப்படுமா என்பதைக் கூறவேண்டும்.

அரசாங்கம் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வது மக்களின் உரிமை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டும் தேர்தல் செயலகத்துக்கு நிதியில்லை

(கொழும்பு)

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்குச் செலவு செய்யப்பட்ட 93 கோடி ரூபாவை, உடனடியாகத் தேர்தல் செயலகத்துக்கு வழங்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா திறை சேரிக்குத் தெரியப்படுத்தியபோதும், இதுவரை அந்தத் தொகை தேர்தல் செயலகத்துக்குக் கிடைக்கவில்லையென, தேர்தல் செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி இந்த நிதியைத் தேர்தல் செயலகத்துக்கு வழங்குமாறு, கடந்த 28 ஆம் திகதி திறைசேரிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

தேர்தல் செயலகம் நிதி தொடர்பாக மிகவும் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்ததாகவும், 16 மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களிடம் பணத்தைப் பெற்றுத் தேர்தல் கடமைகளுக்குப் பயன்படுத்தியதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தொகை மீளவும் மாவட்டங்களுக்கு மீளளிக்கப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொகையிலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டும், மேலும் 40 லட்சம் ரூபா தேர்தல் காலத்தில் செயற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி வழங்க உத்தரவிட்ட தொகையை, திறைசேரி - தேர்தல் ஆணையாளர் செயலகத்துக்கு வழங்காதமை குறித்து, ஜனாதிபதிக்குக் கடிதம்மூலம் அறிவிப்பதெனத் தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவேண்டிய பணத்தைத் திரட்ட முடியாமையால், கொழும்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மிகுந்த நெருடிக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# வாக்களிப்பதற்கு கட்டாயம் அடையாள அட்டை தேவை

## உயர் நீதிமன்றில் கருத்து கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பின்போது, அடையாள அட்டையைக் காண்பிப்பது அவசியமானது என, அண்மையில் அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் சட்டவலு தொடர்பாக உயர் நீதிமன்றத்திடம் கருத்துக் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அமைச்சரவையின் செயலர் இதற்கான மனுவை நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அரசியலமைப்பின் 122 ஆவது சரத்தின்படி, அமைச்சரவையின் தீர்மானத்துக்கு சட்ட வலுவைப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும் என்று கருதப்படுகிறது.

# நுரைசோலை அனல் மின் நிலையத்துக்கு நாடாளுமன்றத்தில் பலத்த எதிர்ப்பு!

(கொழும்பு)

புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையம் - மக்கள்மீது திணிக்கப்பட்டால், மக்களை ஒன்று திரட்டிப் போராட்டத்தை நடத்தப்போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஏ.பாயிஸ் எச்சரித்துள்ளார்.

நுரைச்சோலையில் அனல் மின்னையம் அமைக்கப்படுவதன் அவசியத்தை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியபோதே பாயிஸ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

மேற்குலக நாடுகளில் இன்று, அனல் மின் நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன. அமெரிக்கா அதற்குச் சிறந்த உதாரணம் ஆகும். ஜேர்மன் மற்றும் ஜப்பானிலும் அனல் மின் நிலையங்களின் தாக்கங்கள் உணரப்பட்டுள்ளன.

அனல் மின் நிலையங்களில் ஏற்படும் மாசுக்கள் காரணமாக மனிதனில் புற்றுநோயை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் இருப்பதாக மருத்துவ தகவலைச் சுட்டிக் காட்டிய கே.ஏ. பாயிஸ் அனல் மின் நிலையங்கள் காரணமாக அமில மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

புத்தளம் அனல் மின் நிலையம் காரணமாக ஏற்படும் அமில மழைத் தாக்கம் புத்தளம் மற்றும் அநுராதபுர மாவட்ட மக்களைப் பாதிக்கக் கூடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# எரிபொருள், மின் கட்டணங்கள் அதிகரிப்பதைத் தவிர்க்கவும்

## நிதியமைச்சருக்கு ஜே.வி.பி கடிதம்

வாழ்க்கைச் செலவு அதிகரித்ததன் காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்கு ஜே.வி.பி அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்பாக பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அனுப்பிவைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் - வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக எரிபொருள் வகைகளையும், மின்சாரக்கட்டணங்களையும் அதிகரிக்கக் கூடாத வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடாகும்.

இதன் மூலம் ஏற்படுகின்ற நடவடிக்கைகளை ஈடுசெய்வதற்கான மாற்று யோசனைகள் குறித்து, அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் கேட்டிருக்கின்றார்.

# யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த நிவாரணப் பணிகளுக்கான அதிகாரிகள் கொழும்புக்குத் திருப்பி அழைப்பு!

யாழ்ப்பாணத்துக்கு 5 நாட்கள் என்ற அடிப்படையில் விஜயம் செய்திருந்த நிவாரணப் பணிகளுக்கான நிறுவனங்களின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் உடனடியாகக் கொழும்பு திரும்பினார்.

சுமார் 5 நிறுவனங்களின் 13 அதிகாரிகளே இவ்வாறு கொழும்பு திரும்பியவர்களாவர். கொழும்பில் அமைந்துள்ள இவர்களின் தலைமையகங்கள் விடுத்த அவசர அழைப்பை அடுத்தே இவர்கள் கொழும்பு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு நலன் கருதியே இந்த அவசர அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நடேசன் நினைவாக கருத்துரையும் கருத்துப் பகிர்வும்

(வவுனியா)

நாட்டுப்பற்றாளர் நடேசன் நினைவாக கனேடிய தமிழ் வானொலியின் அனுசரணையுடன், வவுனியா மாவட்ட ஏற்பாட்டுக்குழுவின் ஒழுங்கமைப்பில் இலங்கை ஊடகத்துறையும், இனப்பிரச்சினையின் இன்றைய நிலையும் என்ற தலைப்பில கருத்துரையும், கருத்துப் பகிர்வும் இன்று பிறபகல் 3 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.



யாழ்.குடாநாட்டுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த அமெரிக்க கடற்படையின் பசுபிக் பிராந்திய தளபதி லெப்.ஜெனரல் கிறேக்சனை யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வரவேற்பதை முதற் படத்திலும், 55 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் வி.ஆர்.சில்வா கைலாகு கொடுப்பதை இரண்டாவது படத்திலும்,

தனது வருகையின் நினைவாகப் பலாலி படைத்தளத்தில் மாங்கன்று ஒன்றை கிறேக்சன் நடுவதை மூன்றாவது படத்திலும், வட பிராந்திய கடற்படைத் தளபதி கொமடோர் ஜே.பி.பீரிஸிடம் நினைவுச் சின்னம் ஒன்றைக் கையளிப்பதை நான்காவது படத்திலும் காணலாம்.

# சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமாம்

## எதிர்க்கட்சியைக் கோருகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலிகளுடன் பேச்சு நடத்தும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக மட்டுமே பேச்சு நடத்தப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனையே தற்போது எழுந்துள்ள சிக்கல்களுக்குக் காரணமென ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேச்சு வார்த்தைகள் தாமதமடைவதால், இலங்கைக்குக் கிடக்க வேணடிய வெளிநாட்டு நிதியுதவிகள் தாமதமாகுமானால், எதிர்க்கட்சி விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் அரசு மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

கோடிக் கணக்கான ரூபாவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மட்டுமே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியதில்லை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாக சபை மீதான நாடாளுமன்ற விவாதம் ஒக்ரோபரில்

இடைக்கால நிர்வாக சபை மீதான நாடாளுமன்ற விவாதம், ஒக்ரோபர் மாதமளவில் நடத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த விவாதத்தைச் செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு - முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததாலும், ஜாதிக ஹெல உறுமயவின் வேண்டுகோளின் பெயரிலேயே இந்த விவாதத்தை அடுத்த ஒக்ரோபர் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாடாளுமன்றத்தில் மூன்று நாட்கள் விவாதம் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் தலைமைப் பதவியை ஹெல உறுமயவுக்கு வழங்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

# தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 347 ஓட்டங்கள்!



(காலி)

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் காலியில் இடம் பெற்றுவரும் முதலாவது டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது எவ்வித விக்கெட் இழப்புமின்றி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி - நேற்று ஆட்டம் ஆரம்பமாகிய சிறிது நேரத்திலேயே 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த டிப்பென்னாரன் அவுட்டானார்.

அதன்பின்னர் ஜார்ஸ்வெல்ட்டுடன் இணைந்தவர் றுடோல்ப். இருவரும் இணைந்து விளையாடிபோது, ஜார்ஸ்வெல்ட் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, முரளிதரனின் பந்துவீச்சில் சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

நான்காவது விக்கெட்டுக்காக றுடோல்ப்புடன் இணைந்தவர் தென்னாபிரிக்க அணியின் தூணான கலிஸ். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் கலிஸ் 78 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 59 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் முரளிதரனின் பந்துவச்சில் சங்ககாரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் தென்னாபிரிக்க வீரர்களான அணித்தலைவர் சிமித் 23, பௌச்சர் 6, பொலக் 25, குளூஸ்னர் 2 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

றுடோல்ப் 85, நிக்கி போஜி 31 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் 31 உதிரி ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.



பந்துவீச்சில் சமிந்த வாஸ், டில்ஷான் இருவரும் தலா ஒன்று, முரளி, ஜெயசூர்யா இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்க அணியின் இரண்டு விக்கெட்டுக்களை நேற்றைய தினம் கைப்பற்றியதன் மூலம் - டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்கள் வரிசையில் [illegible] முரளிதரன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்காக அமெரிக்க உதைபந்தாட்ட வீராங்கனைகள் தீவிர பயிற்சியில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## கலைமகள் முன்பள்ளி விளை யாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா - நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலய மைதானத்தில் நிலையத்தின் தலைவர் எஸ்.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (100)

******* இன்னும் 06 நாட்களில் ******




# கூடைப்பந்தாட்டப் போட்டி; இறுதியாட்டமும், பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

அமரர் தம்பிஜயா சிறிதரன் ஞாபகார்த்தமாக, கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய - யாழ்மாவட்ட அடிப்படையிலான மாபெரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் இளைப்பாறிய பிரதி அதிபரும், முன்னாள் கூடைப்பந்தாட்டப் பயிற்சியாளருமான வீ.சோமசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து, யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்துக்காக மோதவுள்ளது.

இதேவேளை, இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.




# தேசிய விளையாட்டு விழாவில் யாழ். ஹொக்கி அணி!

30 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் பங்கேற்பதற்காக, வட - கிழக்கு மாகாணத்திலிருந்து யாழ். மாவட்ட ஹொக்கி அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அணியில் செ.செந்தூர், சு.உதய[illegible], றெஜினோல்ட் சாம்சன், ப.தர்மகுமாரன், கு.பிரபாகரன், க.வசந்தரூபன், பெஞ்சமின் லூயிஸ் மோகன், தே.அருட்செல்வம், சி.சிவதீஸ், மொகமட் இம்தியாஸ் ஜெயரஞ்சன், வில்லியன் ஜெயநேசன், சி.நிகால் சுரேன்குமார், எல்.பிரதீபன், ச.சாருஜன், இ.குகன், றிகேஷ் ராஜேந்திரா, ஜீ.குமணன், ஞானசீலன் கிறேசியன், ம.வினோகாந்தன், கே.ஜசிந்தன் ஆகிய 20 பேர் கொண்ட அணியே தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளச் செல்லவுள்ளது.

# ஹொலண்ட் - இங்கிலாந்து போட்டிகளுக்கான இந்திய கிரிக்கெட் அணி அறிவிப்பு!

ஹொலன்டில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி மற்றும் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள நட்வெஸ்ட் ஒரு நாள் போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட இந்திய கிரிக்கெட் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

காயமடைந்துள்ள சகீர்கானுக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் அகர்கர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றும் விக்கெட் கீப்பர் பார்த்தீவ் படடேலுக்குப் பதிலாக தமிழகத்தைச் சேர்ந்த தினேஷ் கார்த்திக் இடம்பெற்றுள்ளார்.

அத்துடன், ரோகன் கவாஸ்கரும் 15 பேர் கொண்ட குழுவில் இடம் பெற்றுள்ளார். இதில் கவாஸ்கர் தவிர மற்ற அனைவரும் இங்கிலாந்து நட்வெஸ்ட் போட்டியில் பங்கேற்பார்கள். இந்தத் தகவலை கிரிக்கெட் சபையின் செயலாளர் எஸ்.கே.நாயர் அறிவித்தார்.

மேலும், வீரர்கள் போட்டிகளில் வெளிப்படுத்தும் திறமையின் அடிப்படையிலும் மற்றும் கப்டன், பயிற்சியாளர் ஆகியோரது ஆலோசனையின் பேரிலும் அணியில் சேர்க்கப் படுவார்கள் என்றும் நாயர் தெரிவித்தார்.

ஹொலன்டில் நடைபெறவுள்ள மூன்று நாடுகள் போட்டியில் இந்தியா, அவுஸ்ரேலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் மோதவுள்ளன. இந்தப் போட்டி இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அடுத்ததாக இங்கிலாந்தில் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நட்வெஸ்ட் கிண்ணத்துக்கான ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளது. இதில் மொத்தம் 3 போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஐரோப்பிய சுற்றுப் பயணத்துக்கான இந்திய அணி இந்த மாதம் 17 ஆம் திகதி மும்பையிலிருந்து புறப்படும். மேலும் இங்கிலாந்து சம்பியன்ஸ் போட்டியில் ரோகன் கவாஸ்கர் தவிர ஹொலண்ட் போட்டியில் பங்கேற்கும் அதே அணிதான் பங்கேற்கும் என்றும், அப்போட்டியின் விதிமுறைப்படி 14 வீரர்களுக்குத்தான் அனுமதி கிடைக்கும் என்றும், சம்பியன்ஸ் போட்டி செப்ரெம்பர் 10 முதல் 25 வரை நடைபெறும் என்றும் கூறினார்.

### இந்திய அணி

சௌரவ் கங்கூலி (கப்டன்), ராகுல் ராவிட், வீரேந்தர் ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன், யுவராஜ்சிங், முகமட் கை.'.ப், இர்பான் பதான், ரோகன் கவாஸ்கர், ஆஷிஸ் நெஹ்ரா, லக்ஷ்மிபதி பாலாஜி, தினேஷ் கார்த்திக், அஜித் அகர்கர், ஹர்பஜன்சிங் மற்றும் அனில் கும்ப்ளே.

## தாச்சிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் 2004 ஆம் ஆண்டின் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று - சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதும் போட்டி பிற்பகல் 4 மணிக்கும்,

நவாலி தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆலடி இந்து விளையாட்டுக்கழகம் மோதும் போட்டி பிற்பகல் 5 மணிக்கும் நடைபெறவுள்ளது.

# மின்னணு பாதுகாப்பு வலையில் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி!



(எதென்ஸ்)

மூச்சுவிடும் சத்தம் முதல் குண்டு வெடிக்கும் சத்தம் வரை உணர்ந்து கொள்ளும் கருவி, மனித நடமாட்டத்தில் ஏற்படும் மாற்றத்தை உணர்ந்துகொள்ளும் கருவிகள் என அனைத்தையும் நேரில் பார்க்கும் பாக்கியத்தை கிரீஸ் தலைநகர் எதென்ஸுக்கு செல்வோர் பெற்றுள்ளனர்.

ஆனால், ஒலிம்பிக் போட்டி சமயங்களில் மட்டும்தான் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியை எதென்ஸ் ஒலிம்பிக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் நேரிடையாகக் காணமுடியும்.

தற்போது எதென்ஸ் நகரமே மிகப்பெரிய மின்னணு பாதுகாப்பு வலையில் சிக்கியுள்ளது.

எந்த அசம்பாவிதமும் நேர்ந்துவிடக்கூடாது என்று போட்டி அமைப்பாளர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.

பாதுகாப்புக்காக திட்டமிடப்பட்டதைவிட அதிக அளவிலான பணத்தைக் கொட்டியுள்ளது எதென்ஸ்.

பாதுகாப்புக்காக மட்டும் 15 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மின்னணு பாதுகாப்புக்காக மட்டும் நான்காயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சான்டிஜியோவைச் சேர்ந்த சயன்ஸ் அப்ளிகேஷன்ஸ் இன்ரர்நேஷனல் நிறுவனம் இந்த மின்னணு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அதன்படி எதென்ஸ் நகரில் இருக்கும அனைவரையும் படம்பிடிக்கும் கமெராக்கள், மிக மெல்லிய ஒலியைக்கூட பதிவுசெய்யக்கூடிய 1000 அதி துல்லியமான கதிரியக்க கமெராக்கள், 12 ரோந்துப்படகுகள், நான்யிரம் வாகனங்கள், 9 ஹெலி கொப்ரர்கள், வேவு விமானங்கள், 4 நடமாடும் கண்காணிப்பு மையங்கள் என்று அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறையின்படி கண்காணிப்பு மையத்திலிருந்தே நகரமெங்கும் நடைபெறும் நிகழ்வுகளைக் காண முடியும்.

குறிப்பிட்ட பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது, தேவையில்லாமல் குழுவாகக் கூடி நிற்பது போன்றவற்றை உடனடியாகக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கமுடியும்.

கண்காணிப்பு கமராக்களின் மூலம் ஒருவரை நேரில் பார்ப்பதைப் போலவே படமெடுக்கமுடியும்.

பல்வேறு கண்காணிப்புக் கமராக்கள் உள்ளிட்ட சாதனங்களிலிருந்து பெறப்படும் படங்கள் உள்ளிட்ட தகவல்கள் டிஜிட்டல் முறையில் பதிவுசெய்து வைக்கப்படும்.

இதைத்தவிர தகவல் தொழில்நுட்பத் தகவல்களையும் கண்காணிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. எந்த மொழியில் பேசினாலும் அதை அறிந்துகொள்ளக்கூடிய மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. அதேபோல் தொலைபேசி, செல்போன் ஆகியவற்றையும் கண்காணிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் உள்ளூர் வாசிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

## வருடாந்த விளையாட்டு விழா

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தின் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை நவாலி மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளதென அதன் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் செல்வி இரா[illegible]ரத்தினம் இந்திராணி தேவி அறிவித்துள்ளார். (100)

★ ★ ★

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத்தின் தலைவர் சு.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் உபதலைவர் த.சிறீவிமலேஸ்வரன் அவரது பாரியார் ஆனந்தி சிறீவிமலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (100)

## தெல்லிப்பளை பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுவிழா

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் தெல்லிப்பளை பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கான இவ்வருடத்துக்குரிய வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் செ.நம்பியாரூரன் தலைமையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அளவெட்டி, இளவாலை, மல்லாகம், தெல்லிப்பளை ஆகிய முன்பள்ளிக் குடும்பங்களுக்கிடையே ஏற்கனவே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இந்தப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களே இன்று நடைபெறும் பிரதேச மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (94)

# புதிர்கள்

1. ஒரு பாடசாலையில் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்தார்கள். மொத்தம் 59 மாணவர்கள் செல்வதாக இருந்தது. சுற்றுலாக்களுக்கு வாகனம் வழங்கும் ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார் அதிபர். அந்த நிறுவனத்தினர் தங்களிடம் 9 பேர் அமரக்கூடிய வான்களும், 4 பேர் மட்டும் அமரக்கூடிய கார்களும் இருப்பதாகத் தெரிவித்து, சில கார்களையும், சில வானகளையும் அனுப்ப வைத்தனர். 59 மாணவர்களுக்கும் இடம் கிடைத்தது. எந்த இடமும் வெறுமையாக இருக்கவில்லை. அந்த நிறுவனம் எத்தனை வான்களையும், எத்தனை கார்களையும் அனுப்பியது?

2. கடிகாரப் புதிர்.




இரண்டு நேர் கோடுகளைக் கொண்டு கடிகாரத்தை மூன்று துண்டுகளாகப் பிரிக்கவும். ஒவ்வொரு துண்டிலுமுள்ள எண்களைக் கூட்டினால், எல்லாத் துண்டுகளின் தொகையும் சமமாக வரவேண்டும்.

# மூளைக்கு வேலை

1. வரிசையில் விடுபட்டுள்ள எண் என்ன?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 13 | 19 | 25 | 31 | ? | 43 |

2. விடுபட்ட எண்ணும் எழுத்தும் எவை?

| | | | |
|---|---|---|---|
| 4 | 6 | 9 | ? |
| D | F | ? | M |

## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1. விடுபட்ட என் - 5

## புதிர் சென்றவார விடைகள்

1. 191/2 மீற்றர்
(191/2 + 201/2) = 40
2. 11 பென்சில்கள்.
3. 3 செடிகள்.
4 வண்ணத்துப்பூச்சி.

## விடுகதை சென்றவார விடைகள்

1. நட்சத்திரம்
2. நுங்கு
3. மிளகாய்
4. தந்தம்
5. கண்கள்

# சித்திரக்கதை

## குறும்பு IV










கதை, ஓவியம் - ந.யருன் (தொடரும்...)

# ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைநது அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................

.......................... ........ ..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# நான்

எனது பெயர் சிவபாலன் சிவானந்தன். எனது அப்பாவின் பெயர் சிவபாலன். அம்மாவின் பெயர் புனிதவதி. எனக்கு நான்கு சகோதரர்களும், ஒரு சகோதரியும் இருக்கிறார்கள்.

எனது பாடசாலையின் பெயர் யாழ். ஆ.தி. கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம். நான் தரம் 9 இல் கல்வி கற்கிறேன். எங்கள் பாடசாலையில் 32 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். எங்கள் ஊரின் பெயர் காரைநகர். எங்கள் ஊரில் கசூரினா கடற்கரை உண்டு. பிரசித்தி பெற்ற ஈழத்து சிதம்பரமும் உண்டு.

சி.சிவானந்தன், தரம் -9

இங்கே மடிக்கவும்





**சிந்தனைக்கு!**
வெற்றிபெற முடியும் என்ற எண்ணம் தான் வெற்றியைத் தேடித்தரும்.

# சிறுவர் அரங்கம்

# குட்டி முயலார்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அம்மா எவ்வளவுதான் ஆறுதல் சொல்லிய போதிலும், தனது அருமைத் தாயாரும், அன்புத் தம்பிகளும் சாப்பிடுவதற்கு எதையும் எடுத்து வர முடியவில்லையே என்று நினைத்து - மிகவும் கவலைப்பட்டார் குட்டிமுயலார்.



வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. ஓடிச்சென்று குட்டி முயலார் கதவைத் திறந்தார். அங்கே பெரியதொரு கூடையைக் கையில் வைத்துக் கொண்டு முள்ளம் பன்றியார் நின்றிருந்தார்.

குட்டி முயலாரே உமக்கு எனது அன்புப் பரிசு என்று சொல்லி, கூடையை முயலாரிடம் கொடுத்தார். கூடையிலே புத்தம் புதிய காளான்கள் நிறைந்திருந்தன.





குட்டிமுயலாரின் தம்பிகளுக்குக் காளான்கள் என்றால் மிகவும் விருப்பம்.

பசி தீர ஆசையாகத் தம்பிகள் காளான்களைச் சாப்பிடுவார்கள் என்பதால், குட்டிமுயலார் மிகுந்த சந்தோஷம் கொண்டார்.

முள்ளம் பன்றியாரே - உமக்கு மிகவும் நன்றி என்று முள்ளம் பன்றியாரைப் பார்த்துச் சொன்னார் குட்டிமுயலார்.

குட்டிமுயலாரே! சுவை மிகுந்த பழங்களைத் தக்கநேரத்தில் தந்து, எனது குட்டிகளின் பசியைப் போக்கிய உமக்கு நானல்லவா நன்றி சொல்லவேண்டும் என்று கண்கள் கலங்கிடச் சொன்னார் முள்ளம் பன்றியார்.

முள்ளம் பன்றியார் வீட்டுக்குப் போய் வருவதாகச் சொன்னார். முள்ளம் பன்றியாருக்குக் குட்டிமுயலாரும், அம்மா முயலாரும், தம்பிகளும் அன்போடு விடை கொடுத்து அனுப்பினார்கள்.

திறந்திருந்த யன்னல் வழியாகத் திடீரென்று எட்டிப் பார்த்தார் கரடியார். குட்டிமுயலாரே, குட்டி முயலாரே என்று உரத்த குரலில் குட்டிமுயலாரைக் கூப்பிட்டார்.

குட்டிமுயலாரே உமக்கு எனது அன்புப் பரிசு இது என்று சொல்லிய கரடியார் - ஒரு மரப் பீப்பா நிறையத் தேனைக் குட்டிமுயலாரிடம் கொடுத்தார். கரடியாருக்கு மிகவும் நன்றி சொன்னார் குட்டிமுயலார்.

குட்டிமுயலாரிடம் விடைபெற்ற கரடியார் - தனது வீட்டுக்கு விரைந்து ஓடிச்சென் றார். கரடியார் போன கையோடு, குட்டிமுயலாரின் வீட்டுக்கு வெள்ளாடார் வந்தார்.



குட்டிமுயலாரே! உமக்கு எனது அன்புப் பரிசு இது என்று சொல்லி, வெள்ளாடார் ஒரு செம்பு நிறையைப் பாலைக் குட்டி முயலாரிடம் கொடுத்தார்.

ஆடாரே உமக்கு மிகவும் நன்றி என்று சொன்னார் குட்டிமுயலார். வெள்ளாடார் போன கையோடு, குட்டிமுயலாரின் வீட்டுக்கு வந்தார் காக்கையார். ஒரு பை நிறைய கச்சானை எடுத்து வந்து, குட்டிமுயலாரிடம் கொடுத்தார் காக்கையார்.



காக்கையாரே! உமது அன்புக்கு மிகவும் நன்றி என்று மகிழ்ச்சியோடு சொன்னார் குட்டிமுயலார்.

காக்கையாரைப் பார்த்த குட்டிமுயலார் - காக்கையாரே, காக்கையாரே கட்டாயமாக நீர் இன்றைக்கு எம்மோடு சேர்ந்து சாப்பிட வேண்டும் என்று சொன்னார். காக்கையாரும் அதற்கு மகிழ்வோடு சம்மதித்தார்.

குட்டிமுயலாரது வீட்டிலே இப்போது மரக்கறிகளும், தேனும், பாலும் நிறைந்திருந்தன. குட்டிமுயலாரின் அம்மா - சாப்பாட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து மேசை மேல் வைத்தார். காக்கையார் விருந்தாளியாகக் கலந்துகொள்ள அருமையானதொரு விருந்து குட்டிமுயலாரின் வீட்டிலே நடந்தது.

கஷ்டப்படுபவர்களைப் பார்த்து, அவர்கள் மேல் இரக்கம் கொண்டு உதவி செய்வது எப்போதுமே நமக்கு மேன்மையைத் தேடித்தரும் என்பது மிகவும் உண்மையல்லவா.

- யோ.சத்யன்

- முற்றும்.

# தெரிந்துகொள்ளுங்கள்

- முதன்முதலில் கிரகங்களின் சுழற்சியை ஆராய்ந்து கண்டறிந்தவர் கெப்ளர்.
- விசில் அடிப்பது போன்ற ஒலியை உருவாக்கும் ஒரே உயிரினம் டொல்பின்.
- இறக்கைகளே இல்லாத பறவை அவுஸ்ரேலியாவிலுள்ள கிவ.
- பருத்தியை எலிதில் வெள்ளைத் தங்கம் என்று அழைக்கிறார்கள்.
- யானையின் தந்தங்களைப் பார்த்திருப்பீர்கள். அதேபோல் தந்தங்கள் உள்ள உயிரினம் கடலில் வாழும் வால்ரஸ் மட்டுமே.
- சீனாவில் புனித விலங்காகக் கருதப்படுவது பன்றி.
- தேன்கூட்டைக் கலைத்தால் தேனீக்கள் கொட்டும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அவற்றால் ஒருமுறை மட்டுமே கொட்ட முடியும். ஏனெனில், அவை கொட்டப் பயன்படுத்தும் கொடுக்குகள் கொட்டியதும் எதிரியின் உடலிலேயே தங்கிவிடும்.
- 1918 ஆம் ஆண்டில் பரவிய ஃப்ளு காய்ச்சல் மிக கொடூரமானது. இதில் ஆறு கண்டங்களிலுள்ள உலக மக்களில் கிட்டத்தட்ட அரைப்பங்கினர் பாதிக்கப்பட்டனர்.
- உலகில் இதுவரை அமைக்கப்பட்ட சாம்ராஜ்யங்களில் மிகப் பெரியதும், மிகவும் பலம் பொருந்தியதும் செங்கிஸ்கானுடையது. கிழக்கில் சீனக் கடலில் ஆரம்பித்து, மேற்கே கருங்கடல் வரை விரிந்திருந்தது அந்தச் சாம்ராஜ்யம்.

# தூக்கணாங் குருவி



சாதாரணமாக பறவைகளின் கூடுகளைப் போல் தூக்கணாங்குருவிகள் - கூடுகள் கட்டுவதில்லை. அவற்றின் கூடுகள் தொங்கு கிற மாதிரி இருக்கும். தூக்கணாங்குருவி சிறிய பறவை தான். ஆனால், இவற்றின் கூடுகட்டும் திறமையால் ஏனைய பறவைகளிலிருந்து வேறுபடுகிறது.

மஞ்சள் நிறத்தில் மிகவும் அழகாக இருக்கும் இந்தப் பறவைகளின் கூடுகள் - புல், இலை நரம்புகள், நார்களைக் கொண்டு அழகாகவும், நுட்பமாகவும் கூடுகட்டுவதில் வல்லமையுடையது தூக்கணாங்குருவி.

இந்தக் கூட்டினுள்ளே ஓர் அறை இருக்கும்.

உட்புறமுள்ள இந்த அறையில், களி மண்ணை வைத்து மேலே மெல்லிய, மென்மையான நார்களைப் பரப்பி வைத்திருக்கும். கூட்டைக் கட்டி முடித்து விட்டு, ஆண் பறவை - பெண் பறவையை அழைத்து வந்து காட்டும். பெண் பறவைக்கு கூடு பிடித்து விட்டால், இரண்டும் சேர்ந்து அந்தக்கூட்டில் வாழும்.



கூடுகள் - மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருக்கும். கீழ்ப்பக்கத்தில் கூட்டுக்குள் செல்ல வழி இருக்கும். கூடு - குடுவைபோல ஆரம்பித்து மேலே அகன்று இருக்கும். பாம்பு போன்ற எதிரிகள் கூட கூட்டுக்குள் செல்வது கடினம். 30 சென்ரிமீற்றர் முதல் 60 சென்ரி மீற்ற நீளம் வரை கூடு இருக்கும்.

நீர் நிலைகளுக்கு அருகில், கோடை காலங்களில் கூடு கட்டும். விதைகள், பருப்புகள் தான் இவைகளின் முக்கிய உணவு. உணவுக்காகத் தரைக்கு அருகே பறந்துவந்து இரைதேடும்.

பல நூறு தூக்கணாங்குருவிகள் சேர்ந்து ஒரே பகுதியில் வசிக்கக் கூடியவை. ஆபிரிக்கக் காடுகளில் கோடிக்கணக்கான கூடுகளுடன் மிகப் பெரிய தூக்கணாங் குருவிக்கூட்டம் இருந்துள்ளதைக் கண்டு பிடித்துள்ளார்கள். உலகம் முழுவதும் தூக்கணாங்குருவிகள் வசிக்கின்றன. 150 வகைகளில் இவை காணப்படுகின்றன. கூட்டமாக வசிக்கும் பறவைகள் தூக்கணாங்குருவிகள்.

# நினைவில் இருக்கவேண்டியவை

1. வாழ்வில் ஒருமுறை பெறுவது:- பெற்றோர், சகோதரர், வாலிபம், மரணம்.
2. எவரும் எதிர்பாராது வருவது:- நேரம், வாய்ப்பு, மரணம்.
3. அற்பமாய் கருதக்கூடாதவை:- வியாதி, கடன், கடமை.
4. எவராலும் திருட முடியாதவை:- கல்வி, அறிவு, இறைவிசுவாசம்.
5. தூய உள்ளத்துடன் செய்யக்கூடியவை:- தர்மம், பிரார்த்தனை, தியாகம், உதவி.
6. ஞாபகத்தில் இருக்க வேண்டியவை:- நன்றி, கடமை, மரணம்.
7. சென்றால் மீண்டும் பெறமுடியாதவை:- சொல், வயது, நேரம், உயிர், அழகு.

ப.நோயல் டிலக்ஸ்சி
இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத் தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :............................................
கற்கும் பாடசாலை :............................................
கற்கும் தரம் :............................................
வீட்டு முகவரி :............................................
பிறந்த திகதி :............................................
ஆர்வமுள்ள துறைகள் :............................................

.......................... ..........................
திகதி ஒப்பம்

.......................... ..........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

தன்னலமற்றவர்களே - மகிழ்ச்சியாகவும், தங்களுடைய சந்தோஷத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய மனநிலையிலும் இருப்பார்கள். எம்மைப் பற்றி மட்டுமே சிந்தித்து, மற்றவர்கள் தான் எம்மீது அன்பு செலுத்த வேண்டும், மரியாதை தர வேண்டும் என்று நினைப்பது சுயநலம். அவ்வாறு நினைக்கும்போது உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. நீங்கள் எப்படி மற்றவர்கள் மீது அன்பு செலுத்துகிறீர்களோ, எப்படி அவர்களை மரியாதையுடன் நடத்துகிறீர்களோ அப்படியேதான் அவர்களும் உங்களுடன் நடப்பார்கள். அன்பு செலுத்துவீர்கள். தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற பழமொழி ஒன்று உண்டு. அதன் விளக்கம் - எதை விதைக்கின்றோமோ அதனையே அறுவடை செய்ய வேண்டும் என்பதாகும்.

நீங்கள் சுயநலப்போக்குடன் நடந்து கொள்ளும் போது, நல்ல நண்பர்களை இழந்து விடுவீர்கள். மகிழ்ச்சியைத் தொலைத்து விடுவீர்கள். அவ்வாறு சுயநலமாக நடக்காமல், எல்லோரையும் நேசித்து, நட்புறவுடன் பழகிப் பாருங்கள். சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதை உணருவீர்கள். நாம் ஒருவர் மீது மரியாதை செய்வதற்கு ஏதாவதொரு காரணம் தேவைப்படுகிறது. ஆனால், அன்புக்கு ஏதாவதொரு காரணம் தேவையில்லை. ஏனென்றால்? அன்பு இதயத்திலிருந்து வருகிறது. அதற்கு சுயநலம் இல்லை. நட்புடன் அன்பைப் பகிர்ந்துகொண்டு பழகுபவர்களையே எல்லோரும் விரும்புவார்கள் என்பதை எப்போதும் மறந்துவிடாதீர்கள். அது உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

பாசமுடன் - சாரு அக்கா

# எனது பாடசாலை

1. எனது பாடசாலை கொம்மந்தறையில் உள்ளது.
2. எனது பாடசாலையின் பெயர் யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
3. எனது பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை வகுப்புக்கள் உள்ளன.
4. எனது பாடசாலை ஒரு பெரிய பாடசாலையாக விளங்குகிறது.
5. எனது பாடசாலையில் 830 மாணவர்களும் 20 ஆசிரியர்களும் உள்ளனர்.
6. எனது பாடசாலை ஆண்களும், பெண்களும் பயில்கின்ற ஒரு பாடசாலையாக விளங்குகின்றது.

யு.டிலேசிகா.
தரம் 2

# கூடி விளையாடு

கே.வி.குணசேகரம்



*சென்றவாரத் தொடர்ச்சி...*

"கதிர் நீ இனிமேல் குருவிகளைப் பிடிக்கக் கூடாது"
"பிடித்தால் தண்டனை தருவேன்"
வீமன் கடித்தது.
உனக்கு நோகிறதல்லவா?"
"அது போல தான் குருவிக்கும் நோகும்"
"உயிர்களை நேசிக்க வேண்டும்"
"எதிரிகள் மீது அன்பு காட்ட வேண்டும்".
"அப்பாவிகளை வருத்தக் கூடாது".
"நான் இனிமேல் குருவிகளுடன் ஒற்றுமையாக இருப்பேன்"
"பிடிக்க மாட்டேன்".
"மிகவும் மகிழ்ச்சி கதிர்".

முற்றும்.

# புறா

வானத்தில் பறந்து திரியும்
வண்ணப்புறாவே
உந்தன் ஓசைகேட்டு மக்கள்
மனம் மகிழும் புறாவே
வானூர்தி போல் பறந்து திரியும் புறாவே
உந்தன் மணிச்சிறகும்
சின்னக் கருவிழியும்
எம் கண்ணைக் கவருதிங்கே
உன் அழகு வருமா எமக்கு
உன் அழகால் மக்கள் மனம் பறித்தாய்
- புறாவே.

வ.சுஜீத்தா, தரம் 9
யாழ்.வதிரி திருஇருதயக் கல்லூரி.

# முல்லாவின் முன்யோசனை

ஒரு நாள் முல்லா தன் ஊரின் முச்சந்தியில் அமர்ந்திருந்தார். அதைப்பார்த்த பலர், முல்லாவிடம் - ஏன் முச்சந்தியில் அமர்ந்து இருக்கிறீர்கள் எனக் கேட்டனர். அதற்கு முல்லா - என்றைக்காவது ஒரு நாள் இந்த முச்சந்தியில் ஏதாவது நடக்கலாம். அப்போது கூட்டம் சேர்ந்து விடும். அப்போது என்னால் அருகில் வந்து பார்க்க முடியாமல் போய்விடும். அதனால் தான் முன்கூட்டியே வந்து அமர்ந்திருக்கிறேன் என்றார் முல்லா.

# உங்கள் கைவண்ணம்



சு.நர்மதன்
தரம் - 9
யாழ். மத்திய கல்லூரி.



ச.அர்ச்சனா
தரம் - 8
இணுவில் மத்திய கல்லூரி

# பிரபலங்களின் வாழ்வில்

## சொத்து

மாவீரர் அலெக்சாண்டர் சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தையும் நண்பர்களுக்குப் பிரித்துக்கொடுத்தபோது, ஒருவர் கேட்டார் - எல்லாச் சொத்துக்களையும் கொடுத்து விட்டீர்களே! உங்களுக்கென்று எந்தச் சொத்து இருக்கிறது? விலை மதிப்பில்லாத சொத்து என்னிடமிருக்கிறது. - என்று பதிலளித்தார் அலெக்சாண்டர்.

என்ன அது? - கேட்டார் நண்பர்.

தன்னம்பிக்கை - என்று ஒரே வார்த்தையில் அமைதியாக ஆனால் அழுத்தமாகச் சொன்னாராம் அலெக்சாண்டர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# குப்பை கூழங்களை அகற்றுவதற்கு போதிய வாகனங்கள் இல்லையாம்

அரியாலை -சாஸ்திரியார் வீதி, நாயன்மார்க்கட்டு பிள்ளையார் கோவிலடி கண்டிவீதி, கச்சேரிகிழக்கு வீதி ஆகிய பகுதிகளில் பெருமளவு குப்பை கூழங்களும், கழிவுப்பொருட்களும் மிக நீண்ட காலமாகத் தேங்கிக் கிடக்கின்றன.

இதனால், இந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தார்.

இது பற்றி அந்தப் பகுதியில் பணியாற்றும் யாழ். மாநகர சபைப் பணியாளர்களிடம் கேட்டபோது -

தமக்குப் போதியளவு வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றும், இவற்றை அகற்றுவதற்குப் போதியளவு பணியாளர்களும் இல்லை என்றும், இவர்களில் பலர் சில சமயங்களில் ஒரே நேரத்தில் விடுமுறையில் செல்வதால், அந்த நேரங்களில் குப்பை அகற்றும் பணி ஸ்தம்பிதமடைகின்றது என்றும் தெரிவித்தனர். (55)

## நூல் வெளியீடு

பிராமணர்களது நியந்த்ரீ அமைப்பின் அனுசரணையுடன் அமரர் பிரம்மஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்கள் ஞாபகார்த்த நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நியந்த்ரீ அமைப்பின் உப தலைவர் பிரம்மஸ்ரீ ஆ.சுப்பிரமணிய சர்மா வரவேற்புரையையும், பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளை சிறப்புரையையும், பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள் நூல் அறிமுகவுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

# மடு உற்சவத்திற்கு நேரடி பஸ் சேவை

மன்னார் - மடு மாதா ஆலய வருடாந்த உற்சவ நிகழ்வை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி பஸ் சேவை நடத்தப்படவுள்ளதாக யாழ். வடபிராந்தியப் போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து 5 பஸ்களும், காரைநகர் பஸ் நிலையத்திலிருந்து ஒரு பஸ்ஸும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து இரண்டு பஸ்களும் அன்றைய தினம் மடுவுக்கு செல்லவுள்ளன.

இவற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ்கள் 8.30 மணிமுதல் ஒரு மணித்தியால இடைவெளியில் மடுமாதா தேவாலயம் நோக்கிப் புறப்படுமெனவும், அன்றையதினம் மடுத்திருப்பலிக்குச் செல்லவுள்ளோர் குறைந்த போக்குவரத்துக் கட்டணத்துடன் அங்கு சென்று வரமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கிராம அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்களுக்கான இறுதிப் பயிற்சிப் பட்டறை இன்றும், நாளையும் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளன.

கடந்த காலங்களில் - கிராம சேவையாளர்களுக்கு நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்ளாமல் விட்டவர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளவேண்டுமென யாழ். செயலக உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை தெரிவித்தார்.

இந்தப் பயிற்சியில் கிராம சேவையாளர்களது பணிகள் தொடர்பான அறிவுரைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த மானிப்பாய் பிரதேச சபை சட்டம் தயாரிப்பு

## செப்ரெம்பர் மாதம் முதல் அமுல்

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்றவகையில் சட்டமொன்று பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இந்தச் சட்டத்தின்படி - இந்த நடைமுறை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருவதாக சபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார்.

இதன்படி- அந்தச் சட் டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது - ஒரு வீட்டிற்கு ஒரு நாய் மட்டுமே வளர்க்கப்படல் வேண்டும், நாய்களுக் கானபட்டி, உரிமம் பெற்றிருக்க வேண்டும். ஒழுங்கு முறையில் தடுப்பு ஊசி போடப்படல் வேண்டும். ஆகிய சட்டம் அடங்கிய அறிவுறுத்தல் குடும்ப அட்டை தற்போது பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

எனவே - மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் வீட்டுநாய் வளர்ப்பாளர்கள் அனைவரும் இந்தக் குடும்ப அட்டையை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் மற்றும் ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய உப அலுவலகங்களிலும் பொறுப்பதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக 50 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

மேலும் - இந்தச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நாய்வளர்ப்போர் நடந்துகொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. அத்துடன் இந்தச் சட்டத்தின் பிரகாரம் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடத்தவறும் பட்சத்தில் அந்த வீட்டு உரிமையாளர் 1000 ரூபாவை தண்டப் பணமாகச் செலுத்த வேண்டும் எனவும் அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் தேவைப் படும் பட்சத்தில் ஒரு நாய்க்கு மேல் வளர்ப்பதாயின், கட்டி அதற்கேற்ற ஒழுங்கு முறையில் வளர்க்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (100)



நெல்லியடியில் அமைக்கப்பட்ட மகாத்மா சனசமூக நிலைய கட்டடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைக் காணலாம். (13)

# சின்னஞ் சிறு செய்திகள்

## சைவத்திருமுறை விழா

(உடுவில்)

உடுவில் கல்விப் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே வருடாந்தம் நடாத்தப்படும் சைவத்திருமுறை விழா இந்த வருடமும் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவராத்திரி விழா முடிந்தகையோடு இந்த விழா நடாத்தப்படவிருப்பதால், உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் தத்தமது பாடசாலை மாணவர்களுக்குக் கடந்த வருடச் சுற்றறிக்கையின் பிரகாரம், கூடுதலான மாணவர்களை இரண்டாம் தவணை விடுமுறை காலத்தில் தயார்படுத்துமாறு உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் கேட்டுள்ளார். (101)

## பெண்கள் நிலையத்துக்கு நிதியுதவி

சுன்னாகத்தில் அமைந்துள்ள 'வில்லியம் மேதர்' பெண்கள் ஞாபகார்த்த நிலையத்துக்கு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நிதி உதவிபுரிய முன்வந்திருப்பதாக அந்த நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இதன் முதற்கட்டமாக கடந்த மாதம் 22ஆம் திகதி 13 ஆயிரம் ரூபா நிதி 'வில்லியம் மேதர்' பெண்கள் ஞாபகார்த்த நிலையத்தின் காப்பாளரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாதாமாதம் அவ்வாறு நிதி வழங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணினிப் பயிற்சி நிலையம் திறந்து வைப்பு

லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையம் நாளை காலை 10.30 மணியளவில் சாவகச்சேரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் சி.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சீனிவாசன், தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.குணானசிங்கம், சாவகச்சேரி அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், கிராம அலுவலர் இராஜரட்ணம் உள்ளிட்ட பலரும் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

## அரியாலையில் கலை நிகழ்வுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் இடம்பெறும் கலைநிகழ்வுகளுக்கு தற்போது பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

அண்மையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலைநிகழ்வுகளின் போது சில சமயங்களில் ஏற்படுகின்ற கோஷ்டி மோதல்களைத் தவிர்ப்பதற்காக பொலிஸார் அந்தப் பகுதிகளில் பணியாற்றுவார்கள் என்று தீர்மானம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே தற்போது பொலிஸார் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கலை நிகழ்வுகளுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றனர். (55)

## நல்லூர் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21ஆம் திகதியன்று ஆரம்பமாகி தொடர்ந்து 26 நாட்கள் நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான பூர்வாங்க ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நல்லூர் பண்டாரமாளிகை வளவிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெறும்.

## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பழைய மாணவனால் நிதி அன்பளிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு - அதன் பழைய மாணவரான, மன்னாரைச் சேர்ந்தவரும், தற்போது கனடாவில் வசிபபவருமான ஒகஸ்ரின் சேவியர் என்பவர் கல்லூரிக்கு 3 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு கல்லூரி மண்டபத்தில் - நவீன வசதிகளைக் கொண்ட உடற்பயிற்சி நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் தெரிவித்தார்.

## மூத்த பத்திரிகையாளர் கௌரவிப்பு

பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டுக்கு மேலாக பணிபுரிந்தமைக்காக மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா இணுவில் காரைக்கால் சிவன் கோவில் அன்னதான சபையால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் செல்லப்பா நடராசாவின பத்திரிகைத் துறை அனுபவம் பற்றியும் நாடாளுமன்றிலே ஹன்சாட் அறிக்கையாளராக பணிபுரிந்தமை பற்றியும் பாராட்டிப் பேசியிருந்தனர். (94)

## சான்றிதழ்களைப் பெற்றுச் செல்லுமாறு கோரிக்கை

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேசசபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது, சான்றிதழ்களைப் பெறத்தவறியவர்கள் உடனடியாக மானிப்பாய் பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவு அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுச் செல்லுமாறு பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் தெரிவித்தார். (100)

## வெடிபொருட்கள் அகற்றப்பட்டன

(மட்டுவில்)

மட்டுவில் வடக்குப் பகுதியில் உள்ள ஆட்களற்ற வீடு ஒன்றின் கிணற்றிலிருந்த வெடிபொருட்கள் பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் அகற்றப்பட்டு பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டன.

அத்துடன், மேலும் இரு வெற்றுக்காணிகளில் இருந்து வெடிக்காத நிலையில் இருந்து ஷெல்கள் இரண்டும் மீட்கப்பட்டது. (24)

## ஒரு தொகைப் பணத்துடன் பேர்ஸ் கண்டெடுப்பு

அடையாள அட்டை, மோட்டார் அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஒரு தொகைப் பணம் அடங்கியுள்ள பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

# வாகனப் பற்றாக்குறையால் கழிவுகளை அகற்றுவது தாமதம்

(வடமராட்சி)

சாவகச்சேரி நகரசபை வாகனப் பற்றாக்குறை காரணமாக கழிவுக் குப்பைகளை அகற்றுவதில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றது.

இதனால், நகரின் பல்வேறு பகுதிகளில் தேங்கும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நகரசபையிடம் தற்பொழுது இரட்டைச்சில்லு உழவு இயந்திரம் ஒன்றும், மூன்று கைவண்டிகளுமே பாவனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் ஒரு உழவு இயந்திரம் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நகரசபைக்குச் சொந்தமான இரண்டு உழவு இயந்திரங்களும், ஒரு தண்ணீர் பவுசர், டீசல் ட்ரோலர் ஒன்றும் யுத்த காலத்தில் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## சுற்று மதில் அமைப்பு

யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் மிக நீண்ட காலமாகச் சேதமடைந்து காணப்பட்ட சுற்றுமதில் - பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் உதவியால் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. (55)

## கனகரத்தினம் ம.மகா வித்தியாலயமாணவி தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு

(அரியாலை)

கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மாணவி செல்வி கு.தர்சினி, வடக்கு-கிழக்கு பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகளில் - குண்டெறிதல் போட்டியில் 1ஆம் இடத்தையும், பரிதிவட்டம் எறிதல் போட்டியில் 2ஆம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப்போட்டிகளுக்குத் தெரிவாகினார். (55)




வடக்கில் இடம்பெற்ற சமகாலப் பிரச்சினைகளை சிறப்பான முறையில் வெளியிட்டமைக்காக, புலோலியைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் எஸ். தில்லைநாதன் கடந்த வருடத்துக்கான சிறந்த பத்திரிகையாளராக இலங்கை பத்திரிகை ஆசிரியர்சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறந்த பத்திரிகையாளருக்கான விருதை விஜயா நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டின் தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தனா வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)

## புனரமைக்கப்படாத வீதியால் போக்குவரத்துச் சிரமம்

(கிளிநொச்சி)

ஏ-9 பாதையில் இருந்து துணுக்காய் செல்லும் கொக்காவில் வீதி புனரமைக்கப்படாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

ஆலங்குளம், தேறாங்கண்டல், புத்துவெட்டுவான், பழைய முருகண்டி ஆகிய கிராமங்களில் வாழும் 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த வீதி புனரமைக்கப்படாததால் போக்குவரத்துச பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை திறக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை

(வவுனியா)

மூடப்பட்டுள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தை திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லையென வவுனியா வளாகத்தின் இறுதியாண்டு மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

இறுதியாண்டு பரீட்சைக்கு இன்னும் இரு வாரங்களே இருப்பதனால், தமது கல்விச் செயற்பாடுகள் மிகவும் [illegible]சமாக பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் அந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

வளாகத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் இனம் காணப்பட்டு, தீர்வு காணப்பட்டால் தமது கற்றல் செயற்பாடுகளை உரிய முறையில் சீரியமாக கொண்டுசெல்ல முடியும் என்று தெரிவிக்கும் மாணவர்கள் இது சம்பந்தமாக வவுனியா வளாகமோ அல்லது யாழ். பல்கலைக்கழகமோ நடவடிக்கை எடுப்பதாக தாம் உணரவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக மாணவர்கள் வெளியேற்றப்பட்ட நிலையிலும், நிர்வாக உத்தியோகத்தர்கள் பணிக்கு திரும்பாத நிலையிலும் வவுனியா வளாகத்தின் செயற்பாடுகள் முடக்கப்பட்ட நிலையில் இருக்கின்றது. இது சம்பந்தமாக வளாக பீடாதிபதியுடன் பலமுறை தொடர்பு கொண்டபோது, விபரம் எதையும் பெறமுடியவில்லை எனவும் தெரிவித்தனர்.



வன்னிப் பதிவுகள்

# முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் 3 லட்சம் ரூபா பெறுமதியான சொத்தழிவு

முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது, முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான சொத்தழிவுகள் ஏற்பட்டுள்ள தாக பாடசாலை புள்ளிவிபரங்கள் தெரிவித்தன.

1996ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம், முல்லைத்தீவு நகரம் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் தற்போது 885 மாணவர்களுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நெடுங்கேணியில் 873 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

வவுனியாநெடுங்கேணி, பட்டிக் குடியிருப்புக் கிராமத்தில் 873 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன.

படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் இந்தக் கிராம மக்கள் இடம் பெய ர்ந்து மீண்டும் அந்தப் பிரதேசங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பின்பு மக்கள் மீளக் குடியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முன்பள்ளி மேம்பாட்டு நிலையம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் முன்பள்ளி மேம்பாட்டு நிலையம் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் பளை நகர சரஸ்வதி முன்பள்ளியில் இடம்பெற்ற 2004 ஆம் ஆண்டுக்கான திறனாய்வு நிகழ்வுகள் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளில் பல சிறார்கள் பங்கு பற்றியதோடு, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மத்தியிலும் போட்டிகள் இடம்பெற்றன.

கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமை வகித்தார்.

# ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதற்கு யு.என்.எச்.சி.ஆர். நடவடிக்கை எடுக்கவேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. உயர்ஸ்தானிகருக்கு கடிதம்

யுத்த அனர்த்தங்களின் போது தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இந்தியாவுக்குச் சென்ற தமிழ்ச்சமூகம் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலையடுத்து தாயகம் திரும்பும்போது, கடலுக்கு இரையாகும் அவல நிலை ஏற்படுகின்றது. எனவே, இதைக் கவனத்தில் எடுத்து தலைமன்னார், மன்னார் ஊடாக வருவதற்குத் தகுந்த பயண வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் யு.என்.எச்.சி.ஆர் உயர்ஸ்தானிகரிடம் கடித மூலம் கேட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கடந்த காலத்தில் வன்செயல்களின்போது, தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்த பல குடும்பங்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றனர். இவர்களில் பணம் படைத்தவர்கள் சிலர் தங்கள் வசதிகளுக்கு ஏற்ற விதத்தில் அங்கு வாழ்வதுடன், பிள்ளைகளையும் கல்வி கற்க வைக்கின்றனர்.

ஆனால், பலர் அங்கு தொடர்ந்து அகதி வாழ்க்கையைத் தொடர்வதுடன் தமது பிள்ளைகளின் கல்வியை நல்ல முறையில் தொடர முடியாத அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், தாயகம் திரும்பும் அவாவில் சட்டவிரோதமான முறையில் பலர் படகுகள் மூலம் மன்னார் ஊடாகத் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் நாட்டிலிருக்கும் இடைத்தரகர்கள் நபரொருவருக்கு குறைந்தது 3 ஆயிரம் ரூபா வீதம் அறவிட்டே இந்த அகதிகளைப் படகுகள் மூலம் தாயகத்துக்கு ஏற்றி வருகின்றனர்.

தலைமன்னாருக்கும், தனுஷ்கோடிக்கும் இடையில் சுமார் 18 மைல் தூரத்தையும் கடந்து வரும் போது இந்த அகதிகள் படும் துன்பங்கள் சொல்லிலடங்காதவை.

ஆகவே, கடந்த காலங்களில் இந்தியாவில் இருந்த தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்த போது,

19?5ஆம் ஆண்டு இராமேஸ்வரத்துக்கும், தலை மன்னாருக்குமிடையே யு.என்.எச்.சி.ஆர். கப்பல் சேவை நடத்தி, இலங்கை அகதிகள தாயகம் திரும்ப நடவடிக்கை எடுத்தது. அத்தகைய கப்பல் சேவையை மீண்டுமொரு முறை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2783 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

வவுனியா வடக்கில் மீளக் குடியமர்ந்த 3866 குடும்பங்களில் 2783 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்ந்து ஏனைய குடும்பங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நியாப் திட்ட அறிமுக நிகழ்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நியாப்திட்டம் II குறித்த அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நியாப் திட்ட அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட செயலக அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

**வன்னிப் பயணம் - 05** | **சபேசன்**

# இலங்கை ஒரு அழகான தீவு

இப்போது நாங்கள் ஏறி உட்கார்ந்திருக்கும் விமானம் ஏயர் பஸ் ஏ340-300 படிவம். ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தப் படிவ விமானங்களையே ஏயர் லங்கா விட்டுள்ளது.

விமானம் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. புதிதாகவும் இருந்தது. ஏ340 விமானங்கள் முதன் முதலாக 1991இல் இருந்துதான் புழக்கத்துக்கு வந்தன.

இதன் தயாரிப்பு வேலை ஜேர்மன் நாட்டில் உள்ள மியூனிச் நகரில் ஜனவரி 24, 1986இல் தொடங்கியது. இதன் மேம்பாட்டு செலவு (**Development cost**) சுமார் 2 பில்லியன் டொலர்களாகும்.

இப்போது தயாரிப்பில் இருக்கும் ஏ340-500 மற்றும் 600 மேம்பாட்டுச் செலவு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

ஒக்ரோபர் 4, 1991 இல் உலகெங்கும் இருந்து சுமார் 5,000 விருந்தினர்கள் ஏயர்பஸ் ஏ 340-300 விமானத்தின் வெள்ளோட்டத்தைப் பார்க்க பிரெஞ்சு நாட்டில் உள்ள **Toulouse** நகரில் குழுமி இருந்தார்கள்.

பெப்ரவரி 23, 1992 அன்று இந்த விமானம் **Toulouse** நகரில் இருந்து சிங்கப்பூருக்கு (11,760 மிமீ) 12 மணி 43 நிமிடங்களில் பறந்து சென்றது. ஒக்ரோபர் 18, 1992 **Toulouse** நகரிலிருந்து பேர்த் (அவுஸ்திரேலியா) நகருக்கு 16 மணி 35 நிமிடத்தில் பறந்து சென்றது. இரண்டு நகரங்களுக்கும் உள்ள இடைத் தூரம் 16,000 கிமீ ஆகும்.

மீண்டும் **Riode Janeiro - Fran kfurt** பயணத்தை 10 மணி 49 நிமிடத்தில் நிறைவு செய்தது.

இந்த இடத்தில் யூலை 24, 2001ஆம் ஆண்டு கட்டுநாயக்க விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலைக் குறிப்பிடவேண்டும்.

இந்தத் தாக்குதலில் 4 கிபீர் சண்டை விமானங்கள், 3 கே-8 பயிற்சி விமானங்கள், 2- மிக் 27 விமானங்கள், 2 பெல் 412 ஹெலிகள், 2 எம்ஐ-17 பீரங்கி ஹெலிகள், 2 ஏஏஜீ 412 மற்றும் 3 பயணிகள் விமானங்கள் ஆக மொத்தம் 18 விமானங்கள் சேதம் அடைந்தன அல்லது முற்றாக அழிக்கப்பட்டன. சேதமடைந்த விமானங்களில் இரண்டு ஏ340-300 மற்றும் ஒரு ஏ330-200 அடங்கும்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குலில் விமானங்களுக்கும் மற்றும் சுற்றுலா துறைக்கும் ஏற்பட்ட இழப்பின் மதிப்பீடு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 450 கோடி ரூபாய்) என்று மதிப்பிடப்பட்டது.

இந்தத் தாக்குதலை அடுத்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தலைகீழாகச் சரிந்தது. அதுபோலவே வெளிநாட்டவரது முதலீடும் பாதிப்படைந்தது.

இந்தத் தாக்குதலின் அகோரமே விடுதலைப் புலிகளை போர்முனையில் தோற்கடிக்க முடியாது என்ற பாடத்தை ஜனாதிபதி சந்திரிகாவிற்குச் சொல்லிக் கொடுத்து நோர்வே நாட்டின் அனுசரணையை நாடத் தள்ளியது.

தற்போது (2003) ஏயர் லங்கா நிறுவனத்திற்கு 18 விமானங்கள் சொந்தமாக இருக்கின்றன. இதில் **5 ஏ340, 4 ஏ330, 5 ஏ320, 2 Antonov AN1, 2 Cessna Caeavans.**

இந்த விமானங்களை வைத்துக் கொண்டு இலண்டனுக்கு வாரத்துக்கு 11 பறப்புக்கள், சூரிச்சுக்கு 5, பாரிசுக்கு 4, 3 **Frankfurt** பறப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கோலாலம்பூருக்கு நாள் தோறும் பறப்புக்கள் இருக்கின்றன.

விமானத்தில் இரண்டு வரிசை இருக்கைகளுக்கு இடையில் காலை நீட்டி வைப்பதற்கு கொஞ்ச இடைவெளி இருந்தது. முன் இருக்கையின் கீழே பின்னால் இருப்பவர் காலை வைப்பதற்கு ஒரு சிறு சுமை தாங்கி இருந்தது. இருக்கையைச் சற்றுப் பின்புறம் சாய்த்து கண்ணை மூடுவதற்கும் வசதி செய்யப்பட்டிருந்தது. நேர்எதிரே இருந்த இருக்கைக்கு பின்புறத்தில் தொலைக் காட்சி இருந்தது.

விமானத்தில் தொலைபேசி வசதிகூட இருந்தது. கடன் அட்டையைப் பயன்படுத்தி பயணிகள் தொலைபேசியில் ஒருவர் தனக்கு விருப்பமானவர்களுடன் பேசலாம். ஒரு நிமிடம் பேசுவதற்கு கட்டணம் அமெரிக்க டொலர் 5.00 மட்டுமே. கணினி (**laptop**) மூலம் ஈமெயிலை அனுப்பி வைக்க வசதி இருந்தது.

தொலைக்காட்சியில் 18 வெவ்வேறு திரைப்படங்களில் ஒன்றை தெரிவுசெய்து பார்க்கலாம். அதேபோல் 22 வெவ்வேறு வானொலிகளைக் கேட்கலாம். அன்று கமலகாசன் நடித்த படம் ஒன்றைக் காட்டினார்கள்.

விமானம் வானத்தில் பறக்கும் போது இடையிடையே தொலைக் காட்சியில் விமானம் செல்லும் பாதை, இடம், வேகம், உயரம், வெட்பதட்பம் மற்றும் போய்ச் சேர எஞ்சி இருக்கும் நேரம் முதலியவற்றைக் காட்டுகிறார்கள். இந்தத் தரவுகளை விமானத்தின் **Navigation system** சமகாலத்தில் நேரடியாகத் தொலைக் காட்சிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

விமானத்தின் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்ட கமரா விமானத்துக்கு நேரடியாக கீழே உள்ள நிலப்பரப்பை படம்பிடித்து திரையில் காட்டுகிறது. சவுதி அரேபியா பாலைவனம், பாரசீக வளைகுடா, மத்திய தரைக் கடல் போன்றவற்றை திரையில் பார்த்து மகிழலாம்.

தரையில் தலைக்கு மேலே தெரியும் முகிற் கூட்டங்கள் விமானத்தில் இருந்து பார்க்கும் போது காலுக்குக் கீழே தெரிகின்றன.

ஏயர் லங்காவின் முதலீட்டில் 40 வீதம் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சொந்தமானது என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். 1998இல் இலங்கை அரசுக்கும் துபாய் நகரில் இயங்கும் ஐக்கிய அரபு இராச்சிய ஏயர்லைனுக்கும் (**United Arab Emirates Airline**) இடையில் ஒரு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. அதன் கீழ் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஏயர் லைன் 40 வீதமான பங்குகளை (தற்போது 43 சத வீதம்) வாங்கிக் கொண்டது. அது மட்டும் அல்லாமல் பத்து ஆண்டு காலத்துக்கு ஏயர்லங்கா விமான சேவையின் முகாமைத்துவ உரிமையையும் ஐக்கிய அரபு எமிரெட்ஸ் ஏயர் லைன் தன் கையில் எடுத்துக் கொண்டது.

ஏயர் லங்காவுக்கு புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஊழியர் ஒருவர் முதன்மை நிர்வாக அதிகாரியாக (**CEO**) நியமிக்கப்பட்டார். இதனை அடுத்து ஏயர் லங்காவின் நிர்வாகம் முற்றாக மறுசீரமைக்கப்பட்டது.

வணிக திட்டத்தின் படி (**Business Plan**) ஏ330-200 படிவத்தோடு ஏ340-300 மற்றும் ஏ320-200 விமானங்கள் மேலதிகமாக வாங்கப்பட்டன.

1999ஆம் ஆண்டு 5 ஏ330-200 விமானங்களும் ஒரு ஏ340-300 விமானமும் வாங்கப்பட்டது. இப்போது மொத்தம் 18 விமானங்கள் பாவனையில் உள்ளன.

இலங்கை உலகத்து அழகு அத்தனையும் கொட்டிக் கிடக்கும் ஒரு அழகான தீவு என்பது வானம் நீல நிறம், கிளி பேசும், குயில் கூவும், மயில் ஆடும் என்று சொல்வது போன்ற ஒரு உண்மை. சுற்றுலாப் பயணிகள் விரும்பும் பொழுது போக்கு அம்சங்கள் அத்தனையும் அந்தத் தீவில் உண்டு. இயற்கை வஞ்சகம் செய்யாத நாடுகளில் இலங்கை முதலிடம் வகிக்கிறது.

இலங்கை கிழக்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடைப்பட்ட தூரத்தில் இருப்பது சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து இழுப்பதற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

கண்டு களிப்பதற்கு கண்ணைக் கவரும் அழகான கடற்கரைகள், ஆறுகள், மலைகள், நீர்வீழ்ச்சிகள், பூந்தோட்டங்கள், பௌத்த விகாரைகள், இந்துக் கோயில்கள், சிகிரியா கற்பாறை, கண்டி ஏரி, தலதாமாளிகை, யால தேசிய பூந்தோட்டம், அரண மனைகள், சிவனொளிபாதமலை, நாடாளுமன்றம், வடக்கே கீரிமலை, நிலாவரை, காரைநகர் கசூரினா, கிழக்கே கன்னிகா, சித்தாண்டி ... என ஒரு நீண்டபட்டியல் இருக்கிறது.

*(தொடரும்)*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி.*

திருக்குறள்

# நமது நோக்கு

## குழப்பும் நியமனங்கள்

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக் கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அரசாங்கம் எத்தகைய குழப்பம் நிறைந்த தகவல்களை வெளியிட்டு வருகிறதோ-

அது போன்றே, இந்த அரசாங்கத்தின் முதலாவது செயற்திட்டமான, பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நியமனம் வழங்கலிலும் குழப்பங்கள நீடித்து வருகிறது.

தேர்[illegible]க்கு முன்னர் - அனைத்துப் பட்ட தாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்த அரசாங்கம்- இதை எப்படிச் செயற்படுத்தப் போகின்றதோ என எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஆட்சியமைத்த பின்னர் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு கருத்தை வெளியிட்டு பட்டதாரிகளைக் குழப்பியுள்ளனர். பின்னர் ஒருவாறாக நேர்முகத் தேர்வும் இடம்பெற்று இப்போது ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு நியமனமும் வழங்கப்பட்டிருக்கிறது.

27 ஆயிரம் பட்டதாரிகளில் 17 ஆயிரம் பேருக்கு மட்டுமே அரசாங்கம் கடந்த மாத இறுதியில் நியமனக் கடிதங்களை வழங்கியது. எஞ்சிய வேலையற்ற பட்டதாரிகளின் நிலை என்ன? என்ற கேள்வியால் இப்போது நாடே அதிர்ந்து கொண்டிருக்கிறது.

அம்பாறையில், யாழ்ப்பாணத்தில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில் என்று நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் அரச செயலகங்கள் முன் மறியல் போராட்டம் நடத்தியிருக்கின்றனர்.

27 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் அரசாங்கம் எப்படி நியமனம் வழங்கிச் சமாளிக்கப் போகிறது என்ற கேள்வி எழுந்திருந்த நிலையில் - ஒரு பகுதியினருக்குமட்டும் நியமனம் வழங்கிவிட்டு அரசாங்கம் எப்படித் தப்பித்துக் கொள்ளப் போகிறது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இந்த நியமனம் குறித்து அமைச்சர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் இப்போதும் கூட குழப்பம் நிறைந்தவையாகத் தான் இருக்கின்றன. வேலையற்ற பட்டதாரிகளில் ஒரு பகுதியினருக்கு மட்டும் நியமனம் வழங்கப்பட்டதில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைதான் என்னவென்று எவருக்கும் விளங்கவில்லை.

அதுமட்டுமன்றி இந்த நியமனம் வழங்கலில் எந்த முறையைக் கடைப்பிடித்தோம் என்று சொல்ல எந்த அமைச்சராலும் முடியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் சொல்கிறார்கள்.

நியாயமான அடிப்படையில், தகுதியுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படும் யாவரும் குழம்பத்தேவையில்லை என்று,

ஆனால், அமைச்சர்களின் இந்த ஆறுதல் மொழியைக் கேட்டுக்கொண்டு புறக்கணிக்கப்பட்ட பட்டதாரிகள் ஓய்ந்து போயிருக்கத் தயாரில்லை.

அரச செயலகங்கள் முன் மறியல் என்று வீதிக்கு வந்ததுடன் மட்டும் நின்றுவிடாமல், தாமும் மூப்பு அடிப்படையில் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் வகையில் நடவடிக்கைகளிலும் இறங்கியிருக்கிறார்கள்.

இப்படியே அரசாங்கம் ஒரு நடவடிக்கை, பட்டதாரிகள் எதிர் நடவடிக்கையாக அரசாங்கத்தின் முதலாவது திட்டமே குழப்பத்துக்குள்ளாகியிருக்கிறது.

27 ஆயிரம் பட்டதாரிகளையும் ஒரு வருடம் பயிற்சிக்குட்படுத்திவிட்டு நிரந்தர நியமனம் வழங்குவது என்று அரசாங்கம் திட்டமிட்டபோதும்- இதை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறதோ என்ற சந்தேகம் பிரதான எதிர்க்கட்சிக்கு மட்டுமன்றி பொருளாதாரத்துறை சார்ந்தவர்கள் அனைவரிடமுமே இருந்து கொண்டிருக்கிறது.

பெருந்தொகையானோர்க்கு வேலைவாய்ப்புக்கான பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு நியமனம் வழங்குவது, பயிற்சி வழங்குவது சுலபமான விடயங்களாக இருக்காது.

எப்படியோ அரசாங்கம் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டது. இனிமேல் இதில் பாரபட்டசமோ, பாகுபாடோ காட்டப்படாமல் அனைவருக்கும் நியமனம் வழங்குவதுதான் பொருத்தமானது

அப்படி அரசாங்கம் ஒரு பகுதியினருக்கு மட்டும் நியமனம் வழங்கிவிட்டு ஒதுங்கியிருக்கலாம் என்று நினைததால் அது விபரீதவிளைவுகளுக்கே வித்திடும்.

இடைக்கால நிர்வாகம் போன்று அரசாங்கம் குழப்பமான கருத்துக்களை பட்டதாரிகளுக்கு வழங்கிக் கொண்டிருந்தால், நாடு முழுவதும் நெருக்கடிகள் வலுக்கும். இப்படியான நெருக்கடியை அரசு எதிர்கொள்வது இலகுவானதாக இருக்காது என்பது மட்டும் உண்மை.

## நாடும் நடப்பும்




# சேதமடைந்த நிலையில் காணப்படும் பண்ணை வீதியால் போக்குவரத்து சிரமம்

தீவகத்தின் நுழைவாயிலாகக் காணப்படும் யாழ்.பண்ணை வீதி, போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த வீதியின் இரு மருங்கிலும் இராணுவத்தால் அமைக்கப்பட்டிருக்கும், முட்கம்பி வேலிகளால், வீதி மிகவும் ஒடுக்கமாக இருப்பதால் பயணிக்கும் வாகனங்கள் தாமதித்தே பயணிக்க வேண்டியுள்ளது.

நயினாதீவு, சாட்டி போன்ற இடங்களுக்கு செல்லும், உல்லாசப் பிரயாணிகள் உட்பட பெருமளவு வாகனங்கள் தினமும் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றன.

இந்த வீதி பெரும் குன்றும் குழியுமாக காணப்படுவதால் அண்மைக்காலமாக சாரதிகள் - வாகன நலன் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் வீதியைவிட்டு விலகி தரவைகள் ஊடாகவே வாகனங்களை செலுத்துகின்றனர்.

மழைக்காலம் ஆரம்பித்தால் இந்தத் தரவைகள் பயன்படுத்த முடியாத நிலை தோன்றும் என வாகன சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இந்த வீதி வேலணைத்துறை அம்பிகைநகர் சுருவில் புளியம்கூடல் போன்ற பிரதேசங்களில் மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த வீதி வழியாகவே யாழ். நகரில் இருந்து ஊர்காவற்துறைக்கு போக்குவரத்து சேவைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# கல்வியியல் கல்லூரி பீடாதிபதி விசாரணைக்காக அழைப்பு!

## மனித உரிமை ஆணைக்குழு விடுத்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதி மற்றும் கல்வியற் கல்லூரிகளின் ஆணையாளர் ஆகியோரை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைமையகத்துக்குச் சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.ரவிராஜ் என்ற மாணவன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணைக்காகவே இந்த இருவரும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து மாணவன் ஒருவர் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாகக் கடந்த ஆறுமாத காலமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றுவந்த விசாரணை தற்போது கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, இந்த விசாரணைக்காகப் பாதிக்கப்பட்ட மாணவன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆணையாளர் ஆகியோரை எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பு மனித உரிமைகள் அலுவலகத்துக்கு வருகைதருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ப)

# பட்டப்பின் டிப்ளோமா தெரிவுகுறித்து தமிழர் ஆசிரியர் சங்கம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

கல்வி முதுமானி மற்றும் பட்டபின்படிப்புப் பயிற்சி நெறிகளுக்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புக்கள் பீட பீடாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புப் பீட பீடாதிபதி சபா ஜெயராஜாவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் சபா ஜெயராஜா - தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வருடத்தைப்போல் எதிர்வரும் வருடமும் யாழ்.பல்கலைக்கழகத்திலும், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்திலும் நடாத்தப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மாவிலித்துறைமுக மண்டபம் பிரதேச சபையால் புனரமைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவிலித்துறைமுகத்தில் அமைந்துள்ள பயணிகள் இளைப்பாறும் மண்டபம் - நெடுந்தீவுப் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே இருந்த மண்டபத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுடன், மண்டபத்தின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக அந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட பயணிகள் இளைப்பாறு மண்டபத்தில் பொலிஸாரும், கடற்படையினரும் முகாமிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (113)

## பெண்களுக்கு

# மேசன், மின்னிணைப்பு பயிற்சிப் பட்டறை

யாழ்.சமூக மேம்பாட்டு மையம், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைந்து, பெண்களுக்கு மேசன், மின்னிணைப்புப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

யு.என்.எச்.சி.ஆர் இன் உதவியின் மூலம் கோப்பாய், கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களிலிருக்கும் நலன்புரி நிலையங்களிலுள்ள பெண்கள் - மின்னிணைப்பு, மேசன் ஆகிய பயிற்சிகளை இந்தப் பயிற்சிப் பட்டறையில் பெற்றுவருகின்றனர்.

கடந்த மாதம் ஆரம்பித்த இந்தப் பயிற்சிப் பட்டறையில் பெண்கள் உட்பட 120 பேர் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பயிற்சிப் பட்டறைமூலம் பெண்களுக்குச் சுயதொழில் மேற்கொள்ளவும், தலைமைத்துவப் பண்பைப் பெற்றுக்கொள்ளவும் உதவுவதோடு பயிற்சி நெறியின் முடிவில் தகுந்த சான்றிதழ்களும் வழங்கப்படுவதோடு பிரயாணப்படி, தொழில் உபகரணங்கள், சிறு கடன்கள் போன்றவை வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்.சமூக மேம்பாட்டு மைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (55)

வாரநோக்கு...

- யாழவன்

# பெரும்பான்மை பலத்தை எட்டுவதற்கு திட்டமிடும் அரசின் செயற்பாடுகள்





**மீண்டுமொரு தேர்தல் ஏற்படின் அதனை எதிர்கொள்ளும் சக்தி நாட்டுக்கு உண்டோ இல்லையோ, சில கட்சிகள் தேர்தலை சந்திப்பதற்காக தம்மை தயார்ப்படுத்தத் தொடங்கி விட்டன. இதன் ஒரு உபாயமாகவே பட்டதாரிகளுக்கான கண்துடைப்பு வேலைவாய்ப்பு விடயத்தையும் பார்க்க வேண்டியுள்ளது.**

பொருந்தாத கல்யாணத்தினால் என்றுமே பிரச்சினை என்பதை இப்போது தெளிவாக புரிந்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா. அதனாலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைமைப் பதவியை திடீரென இராஜினாமாச் செய்திருக்கின்றார். சந்திரிகாவினதும் அவரது கட்சியினதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இடையூறாக இருந்து வருகின்றமையினாலேயே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளதாக கருதப்படுகிறது.

தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும்படியான சர்வதேச அழுத்தம் இன்று சந்திரிகாவுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமாக இருந்தால் தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை வரைபு விடயமாகவே பேசவேண்டுமென புலிகள் மட்டுமன்றி தமிழ்த் தரப்பினர் அனைவரும் நிபந்தனை விதித்து வருகின்றனர். இது நியாயமான நிபந்தனை என்பதை சர்வதேச சமூகம் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுவிட்டது.

ஜனாதிபதிக்கும் புலிகளுடைய



நிலைப்பாட்டிலே நியாயம் இருப்பதாக ஓரளவிற்கேனும் புரிகின்றது. அதனாலேயே தன்னைச் சந்திக்கும் நோர்வே பிரதிநிதிகள் உள்ளிட்ட சர்வதேச சமூகத்தினரிடம் தமது அரசு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசுவதற்கு தயாராகவுள்ளதாகத் தெரிவித்து வருகின்றார். ஆனால், இது விடயத்திலே ஜனாதிபதியோடு உடனிருக்கும் சிலருக்கும், ஜே.வி.பி.யினருக்கும் என்றுமே உடன்பாடு இல்லை. இனி மேலும் ஏற்படப் போவதில்லை.

இந்த மன ஒற்றுமையின்மையினாலேயே இன்று சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. மண வாழ்வு விவாகரத்து பெறுமோ என்று எண்ணும் அளவுக்கு வந்துவிட்டது.

சோசலிச சமதர்ம இயக்கம் என தம்மை கூறிக்கொள்ளும் ஜே.வி.பி.யினர் என்றுமே அவ்வாறு நடந்து கொண்டதில்லை. இனவாத குட்டைக்குள்ளே ஊறிப் போன அவர்கள் பிரசார மேடைகளில் இருந்து நாடாளுமன்றம் வரை இனவாதத்தையே கக்கி வருகின்றனர். அவர்களோடு இணைந்து இப்போது ஹெல உறுமயவினர் மதவாதத்தை கக்க தொடங்கிவிட்டனர். இலங்கையை அதன் சுதந்திரத்துக்கு பின் பிடித்த இனவாத, மதவாத சனியன்கள் இனனும் விட்டகன்ற பாடாகவில்லை. இதனாலேயே இலங்கை தொடர்ந்தும் இருண்ட யுகத்தை நோக்கி பயணிக்க தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி எடுத்த முடிவானது வரவேற்கக் கூடியதாக இருந்தாலும், அவர் தொடர்ந்து செயற்படப் போகும் விதத்திலே தான் அவரது முடிவின் வெற்றி தங்கியிருக்கிறது. காலங்கள் மாறுவதற்கு அவ்வளவு நேரம் தேவைப்படுவதில்லை என்பது இப்போது புரிந்திருக்கிறது.

அதாவது முன்பு ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்து வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்புவதற்காக தனது நிறைவேற்று அதிகார பலத்தை சர்வாதிகாரத்தனமாக கையாண்ட அதே சந்திரிகா இன்று ஏனோ தானோ நிலையிலாவது சமாதான தேரை நகர்த்துவதற்காக மீண்டும் தனது நிறைவேற்று அதிகாரத்தை கையில் எடுக்கவுள்ளார். இதனாலேயே அவர் ஆளும் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை திடீரென இராஜினாமாச் செய்துள்ளார்.

தனித்து ஆட்சியை அமைக்கக் கூடிய அதிகார வலுவும், ஆசன வலுவும் இன்று எந்த கட்சிகளிடமும் கிடையாது. அந்த நிலையிலேயே ஜனாதிபதியினதும் சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யினருடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்தது. ஆனால், சுதந்திரக் கட்சியினது சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி. இடையூறாக இருந்து வருவதனால் விரும்பியோ, விரும்பாமலோ கூட்டை உடைக்க வேண்டிய நிலை இன்று ஜனாதிபதிக்கு எழுந்துள்ளது.

ஆளும் கூட்டமைப்பு விரைவிலே உடையுமாக இருந்தால் மீண்டுமொரு பொதுத்தேர்தலை சந்திக்க வேண்டிய பரிதாப நிலைக்கு நாடு தள்ளப்படும். மீண்டுமொரு தேர்தல் விரைவிலே வருமென கடந்த தேர்தல் நிறைவுபெற்று புதிய அரசு பதவியேற்றவுடனேயே அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மீண்டுமொரு தேர்தல் ஏற்படின் அதனை எதிர்கொள்ளும் சக்தி நாட்டுக்கு உண்டோ இல்லையோ, சில கட்சிகள் தேர்தலை சந்திப்பதற்காக தம்மை தயார்ப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதன் ஒரு உபாயமாகவே பட்டதாரிகளுக்கான கண்துடைப்பு வேலைவாய்ப்பு விடயத்தையும் பார்க்க வேண்டியுள்ளது.

அரசு கூறுவது போல பட்டதாரிகளுடைய நலனிலே அக்கறை கொண்டே அரசு வேலைவாய்ப்புக்களை வழங்க முன் வந்திருப்பின் அது பாராட்டப்பட வேண்டிய விடயம். ஆனால், வேலைவாய்ப்புக்களை வழங்கும் போது இன ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் அரசு காட்டிய பாரபட்சம் தேர்தலை குறிவைத்தே அரசு வேலைவாய்ப்புக்களை வழங்குவதாக கருத்து கொளளப்படக் கூடிய சூழ்நிலையை உரு



வாக்கியுள்ளது.

வேலைவாய்ப்புக்களை இன விகிதாசாரத்துக்கு ஏற்ப வழங்காது தமிழர்களுக்கு குறைவாகவும், சிங்களவர்களுக்கு அதிகமாகவும் வழங்கியது, மட்டுமன்றி புலிகளுடைய கட்டுப்பாட்டு பிரதேச பட்டதாரிகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்தப் பகுதிகளிலேயே தான் அதிகமான வெற்றிடங்கள் நிலவி வருக்கின்றன. அரசின் இந்த பாரபட்சமான நடவடிக்கை தேர்தலை குறிவைக்கும் செயலாக மட்டுமன்றி சமாதானப் பாதையிலே அது கொண்டுள்ள "நம்பிக்கை"யில் அனைவரையும் காட்டி நிற்கின்றது.

தனது பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றிலே நிருபிக்க முடியாமல் திண்டாடும் அரசு மீண்டுமொரு தேர்தலின் ஊடாக பெரும்பான்மை பலமொன்றை எட்ட திட்டமிடுகிறது. இது அரசினது பகற்கனவாகவே முடிந்து போகும். நிறைவேற்று அதிகாரத்தை கையிலெடுத்துள்ள ஜனாதிபதி அதனை உரிய வேளையிலே பயன்படுத்தி நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலொன்றை நடாத்த இப்போதிருந்தே திட்டமிடுகிறார்.

புதிய தேர்தலை நடாத்தும் தனது திட்டத்தை கைவிட்டு, ஜே.வி.பி.யையும் கைவிட்டு வேறு நலமான கட்சிகளுடன் இணைந்து சமாதானத்தை முன்னெடுப்பதே சந்திரிகா எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கையாகும். இதனை நிறைவேற்றுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைந்தாலும் நன்றாக இருக்கும்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவளிக்கும் தனது திட்டத்தை அடியோடு கைவிட்டுள்ளதாக ஏற்கனவே அறிவித்துவிட்டது. அரசினது சமாதான நகர்வுகளிலே கொண்ட அதிருப்தியே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறானதொரு முடிவை எடுக்க காரணமென தெரிய வருகிறது. எனவே, தேசிய அரசாங்கம் அமைவதற்கான சாத்தியப்பாடுகளும் இப்போதைக்கு இல்லை.

ஆனால், புதிய தேர்தலொன்று ஏற்படாத வகையிலே நாட்டை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பும் ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. சமாதானம் ஒன்றை கொண்டு வருதற்கு எப்போதும் ஜே.வி.பி.யினர் தடையாகவே இருப்பார்கள் என்பதை ஜனாதிபதி இப்போதாவது உணர்ந்த கொண்டுள்ளமையால் இனிவரும் நாட்களில் சமாதான நகர்வுகளிலே ஜே.வி.பி.யினர் இடையூறு செய்யாத வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.



அண்மையில் புதிதாக பதவியேற்ற வடமேல் மாகாண சபையிலே சமாதானம் தொடர்பான பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட போது அது ஜே.வி.பி.யினரால் தோற்கடிப்பட்டுள்ளது. சாதாரணமாக மாகாணசபை மட்டத்திலேயே சமாதானத்துக்கான ஆதரவும் எதிர்பார்ப்பும் இல்லாத போது எவ்வாறு தேசிய ரீதியிலே சமாதான ஆதரவை ஜே.வி.பி.யிடம் இருந்து எதிர்பார்க்க முடியும்.

இப்போதுள்ள சூழ்நிலையானது, வேண்டாப் பெண்டில் கால் பட்டால் குற்றம், கை பட்டால் குற்றம் என்ற நிலையிலேயே உள்ளது. வேண்டாப் பெண்டிலாக ஜே.வி.பி. எந்த வகையிலுமே ஜனாதிபதியினதும், அவரது கட்சியினதும் நடவடிக்கைகள் அனைத்துக்குமே இடையூறாக இருந்து வருவதனால் ஜனாதிபதி கடுப்பாக உள்ளார். இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக புலிகளுடன் பேசுவதைத் தடுக்க வேண்டாமெனவும் அவர் ஜே.வி.பி.யினரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

சமாதான அனுசரணையாளர்களான நோர்வேயும், சிறிது காலம் விலகி இருப்பதற்கான முடிவை எடுத்துள்ளனர். இந்த இடை விலகல் நிரந்தர விலகலாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் கடமையாகும், சிங்கள மக்களும் தமது சமாதான ஆவலை வெளிப்படுத்தி நிற்க வேண்டும். எவ்வாறு ஹெல உறுமயவும், ஜே.வி.பி.யும் சமாதானத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துகின்றனவோ அதேபோலவே சமாதானத்துக்கு ஆதரவான கோரிக்கைகளும் எழுப்பப்பட வேண்டும்.

இதைவிடுத்து வேலை வாய்ப்புகளின் போது பாரபட்சம் காட்டுவதும், உலக வங்கி பிரதிநிதிகள் புலிகள் பிரமுகர்களை சந்திப்பது தொடர்பாக சட்டச் சர்ச்சை எழுப்புவதும் அரசுக்கு வேண்டாத செயலாகும். எனவே, தீர்க்கமான தூரநோக்கு சிந்தனையுள்ளவராக அரசின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா இருப்பராக இருந்தால், வேலைப்பளுவை குறைப்பதற்காக அவர் துறந்ததாக கூறப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை பாவியாது, தனது நிறைவேற்று அதிகார வலுவை சமாதானத் தேவைக்காக பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் இலங்கை வரலாற்றிலே ஓர் அழியாத இடத்தை அவர் தக்க வைத்துக் கொள்வதுடன் உலக அரங்கிலும் இலங்கைக்கு ஓர் நிலையான இடத்தை பெற்றுக்கொடுக்க முடியும்.

ஆனால், நடக்கின்ற செயல்களைப் பார்த்தால் சில அரசியல்வாதிகள் சுயலாப அரசியலுக்காக வலிந்து போரை ஏற்படுத்திவிட முனைகின்றனர். இது நாட்டை அதளபாதாளத்துக்கு தள்ளும் வழியாகும். இரு தினங்களுக்கு முன்பு நாடாளுமன்றத்திலே அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா "சண்டையென்றால் சண்டை, சமாதானம் என்றால் சமாதானம் நாம் சண்டைக்கும் தயார். இதை உங்கள் வன்னித் தலைமையிடம் கூறுங்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை பார்த்து வீராப்பு பேசியுள்ளார்.

அனுரா உருவத்தில் மட்டுமல்ல தான் அரசியல் அறிவிலும் கோமாளி என்பதை மீண்டும் ஒரு தடவை நாடாளுமன்றிலே நிரூபித்து இருக்கின்றார். அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நாடாளுமன்றிலே வைத்து தந்தை செல்வாவைப் பார்த்து கேட்டார். போரா? சமாதானமா? என

**மீண்டுமோர் போர் ஏற்படுமோ எனும் அச்சநிலை தோன்றியுள்ள சூழ் நிலையில் அனுரா பண்டாரநாயக்காவின் கூற்றானது பின் விளைவுகளை சிந்திக்காத செய்தியாகவே இருக்கிறது. முன்னைய போர்களின் போது பொருளாதார முதுகெலும்பு, படை பல முதுகெலும்பு, அரசியல் முதுகெலும்பு என அனைத்துமே உடைந்து போன சிங்கள தேசம் மீண்டும் போருக்கு தயாராவது கேலியான விடயமே.**

அதன் பின் போரை வலிந்து தமிழர்கள் மீது திணித்தமைக்கான பதிலடியை சிங்கள தேசம் இதுவரை நன்கு அனுபவித்து இருக்கிறது.

இந்த நிலையில் மீண்டுமோர் போர் ஏற்படுமோ எனும் அச்சநிலை தோன்றியுள்ள சூழ்நிலையில் அனுரா பண்டாரநாயக்காவின் கூற்றானது பின் விளைவுகளை சிந்திக்காத செய்தியாகவே இருக்கிறது. முன்னைய போர்களின் போது பொருளாதார முதுகெலும்பு, படை பல முதுகெலும்பு, அரசியல் முதுகெலும்பு என அனைத்துமே உடைந்து போன சிங்கள தேசம் மீண்டும் போருக்கு தயாராவது கேலியான விடயமே.

அமெரிக்க படைத்தளபதிகளை அழைத்து வந்து படைநிலைகளை பார்வையிட வைத்து பாதுகாப்பு ஆலோசனைகளை அரசு பெற்று வருகிறது. இந்த நிலையில் சமாதான நகர்வுகளிலே ஆரோக்கியமான முடிவுகளை எட்டுவதற்காகவே ஜனாதிபதி கூட்டமைப்பின் தலைமைப் பதவியை துறந்தார் என எண்ணுவது அர்த்தமற்றதாகி போய் விடப் போகிறது. ♥

# ஈராக்கின் பலூஜா நகரில் கடும் மோதல் அமெரிக்க ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டது!



ஈராக்கின் நஜாப் நகரில் அல் சதாருக்கு ஆதரவான இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளுக்கும், அமெரிக்கக் கூட்டணிப் படைகளுக்குமிடையில் கடந்த இரண்டு நாட்களாகத் தொடரும் சண்டையில் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த அமெரிக்க வான்படையின் உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த இரண்டு நாள் சண்டையில், சதார் ஆதரவுப் படைகளில் 300 பேரைத் தாம் கொன்றுவிட்டதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். ஆனால், கடந்த இரண்டு நாள் சண்டையில் தமது தரப்பில் 36 பேரே உயிரிழந்ததாகச் சதார் ஆதரவுப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், இரு பகுதியினருக்குமிடையில் கடந்த இரண்டு நாட்களாகத் தொடரும் சண்டையில் 34 பொதுமக்களும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன மாதம் சதார் ஆதரவுப் படையினருக்கும், அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளுக்கு மிடையே ஏற்பட்ட போர்நிறுத்தத்தின் பின்னர் நேற்று முன்தினம் புதிதாக இந்த மோதல் மூண்டுள்ளது.

இந்த மோதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நஜாப் நகரிலுள்ள ஈராக்கியப் பொலிஸ் நிலையம் மீது நேற்றுமுன்தினம் சதார் ஆதரவுக் கிளர்ச்சிவாதிகள் தாக்குதலை மேற்கொண்டபோது அங்கு கடும் சண்டை மூண்டது.

அதையடுத்து, ஈராக்கியப் பொலிஸாருக்கு ஆதரவாக அமெரிக்கப் படையினரும், ஹெலிகொப்ரர்களும் தாக்குதலில் ஈடுபட்டன. இந்த வேளையிலேயே தாக்குதலில் ஈடுபட்ட ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஏழு இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளும், ஒரு அமெரிக்கப் படையினரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் தொடர்வதனால் நஜாப் நகருக்கான மின்சாரம், தொலைத்தொடர்பு என்பன முற்றாகச் செயலிழந்துள்ளன.

நஜாப் நகரில் நடந்துவரும் சண்டையில் ஒன்பது பொதுமக்களும் கொல்லப்பட்டதாக அந்தப்பகுதி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

நஜாப் நகரிலுள்ள பிரதான பொலிஸ் நிலையத்தை சதார் ஆதரவுப் படைகள் தாக்கியபோது, அந்த மாகாண ஆளுனர் பொலிஸாருக்கு ஆதரவாக, அமெரிக்கக் கடற்படையை அழைத்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. ஆனால், ஈராக்கியப் பொலிஸாரும், அமெரிக்கப் படையினருமே தம்மீது முதலில் தாக்குதலை மேற்கொண்டதாக சதார் ஆதரவுப் படைகளின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, பஸ்ரா நகரில் நேற்றுமுன்தினம் பிரிட்டன் படையினருக்கும், சதார் ஆதரவுப் படையினருக்கும் இடையே நடந்த சண்டையில் இரண்டு சதார் ஆதரவுப் படையினர் கொல்லப்பட்டனர்.

நஸ்ரியா நகரில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் இத்தாலியப் படையினர் ரோந்து சென்றவேளை அவர்கள்மீதும், மின்வழங்கும் நிலையம், ஈராக்கியப் பொலிஸ் நிலையம் என்பவற்றின்மீதும் சதார் ஆதரவுப் படையினர் தாக்குதலை நடத்தியதாக இத்தாலியப் படையினர் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல்களில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

இது ஒரு பதட்டமான நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும், ஆனாலும், இத்தாலியப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரியான கப்டன் எற்றோர் சார்லி தெரிவித்தார்.

# மூடப்பட்ட எகிப்து - காஸா வீதியை இஸ்ரேல் படையினர் மீளத் திறந்தனர்



(டெல்அவிவ்)

இஸ்ரேல் படையினரால் கடந்த ஜூலை மாதத்திலிருந்து தடைசெய்யப்பட்ட ரபா அகதிமுகாமிற்கு அருகில் அமைந்த எகிப்து-காஸா எல்லைப்பகுதி மீளவும் போக்குவரத்துக்காகத் நேற்றுத் திறந்துவிடப்பட்டது.

இந்தப் பாதை மூடப்பட்டதனால் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் பயணஞ்செய்ய முடியாதநிலை ஏற்பட்டிருந்தது.

இந்தப் பாதை பாதுகாப்புக் காரணங்களாலேயே கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி மூடப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

சுமார் 2 ஆயிரம் வரையான மக்கள் இந்தப் பாதை மூடப்பட்டதனால் எகிப்தின் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியில் தங்கிவாழும் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதை மூடப்பட்டதனால் மனிதாபிமான நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாக கடந்தவாரம் அமெரிக்கா கவலை தெரிவித்தது.

பலஸ்தீனம் மீது இவ்வகையான நெருக்குதல்களை அதிகரிக்கும்போது, அங்கு புதியவகையில் வேறொரு பிரச்சினை உருவாகும் என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளரான அடம் எறிலி தெரிவித்தார்.

இந்தப் பாதையைத் திறக்குமாறு கடந்தவாரம் எகிப்தும், ஐ.நா. செயலருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தது.

அத்துடன் எகிப்தில் உள்ள இஸ்ரேல் தூதரை அழைத்த எகிப்திய அதிகாரிகள், பலஸ்தீன மக்களின் துன்பங்களுக்கு இஸ்ரேலே பொறுப்பேற்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இந்த வீதி மூடப்பட்ட பின்னர் சிறியதொரு பாதையைப் பயன்படுத்துமாறு தாம் விடுத்த கோரிக்கையை பலஸ்தீன அதிகாரிகள் ஏற்காததாலேயே இந்தப் பிரச்சினை பூதாகரமாக உருவாகியதாக இஸ்ரேல் தெரிவித்தது.

ஆனால், காஸாப் பகுதிக்கு ஒரு நாளைக்கு 200 பேர் செல்லும் இந்தத் திட்டத்தை தாம் ஏற்கமாட்டோம் என பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இஸ்ரேலில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்பும், பலஸ்தீன மக்கள் துன்பப்படுவதற்கு இஸ்ரேல் அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டுமென, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

# ஈராக்கில் கடத்தப்பட்ட 3 இந்தியர் இன்று விடுதலை செய்யப்படுவர்!

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ள குவைத் நிறுவனத்தில் சாரதிகளாகப் பணியாற்றி வந்த திலக்ராஜ், அந்தர்ஜாமி, சுக்தேவ்சிங் ஆகிய 3 இந்தியர்கள், 3 கென்ய நாட்டவர்கள், ஒரு துருக்கி நாட்டவர் ஆகியோர் கடந்த 21 ஆம் திகதி தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டனர்.

கடந்த 17 நாட்களாகத் தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் அந்தப் பயணக்கைதிகளை மீட்க, தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது. தமது கோரிக்கைகளை ஏற்காதுவிடின் பணயக்கைதிகளின தலையைத் துண்டித்துக் கொலை செய்வதாகவும் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்திருந்தனர்.

தீவிரவாதிகளால் நியமிக்கப்பட்ட பழங்குடி இனத் தலைவர் ஷேக் அல துலைமியுடன் - குவைத் நிறுவன அதிகாரிகளும், இந்திய அதிகாரிகளும் நேரடிப் பேச்சுவார்த்தையை நடத்தினார்கள். இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்தது.

தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்க குவைத் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. ஈராக்கை விட்டு வெளியேறவும், பலூஜா நகர மக்களுக்காகத் தீவிரவாதிகள் கேட்ட பணத்தைக் கொடுக்கவும், குவைத்தின் கே.ஜி.எல்.நிறுவனம் சம்மதித்துள்ளது. தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட உடன்பாட்டின்படி கடத்தப்பட்ட பணயக்கைதிகள் இன்று விடுதலை செய்யப்படுவர்.

குவைத் நிறுவனம் தீவிரவாதிகளுடன் நேரடித் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதை, இந்திய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் அகமட் உறுதிசெய்துள்ளார்.

ஆனால், பயணக்கைதிகள் இன்று எப்போது, எந்த இடத்தில் விடுதலை செய்யப்படுவர் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. பணயக்கைதிகள் குவைத் நிறுவன அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தலை ஒட்டிப் பிறந்த குழந்தைகள் சத்திரசிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டனர்



தலை ஒட்டிய நிலையில் இரட்டைக் குழந்தைகள் பிறப்பது இப்போது அடிக்கடி நடக்கும் சம்பவங்களாகி விட்டது. தலை ஒட்டிப் பிறந்த குழந்தைகளைப் பிரிப்பது சத்திரசிகிச்சை வைத்தியர்களுக்கு ஒரு சவாலாக மாறி விட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு தம்பதியினருக்கு கடந்த 22 மாதங்களுக்கு முன் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அந்த இரட்டை ஆண் குழந்தைகளின் தலைப்பகுதி ஒட்டியே இருந்தன.

அந்தக் குழந்தைகளை அறுவைச் சிகிச்சை செய்து பிரிக்க முடிவுசெய்யப்பட்டது. இதையடுத்து, அந்தக் குழந்தைகள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள குழந்தைகள் நல வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். கடந்த 4 மாதங்களுக்கு முன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்தக் குழந்தைகளுக்குப் பலகட்ட சத்திரசிகிச்சைகள் நடந்தன. இரு தலைகளையும் இணைக்கும் தசைகள், நரம்புகள் துண்டிக்கப்பட்டன.

இரு குழந்தைகளையும் தனித்தனியாகப் பிரிக்கும் முக்கியமான இறுதிக்கட்டச் சத்திரசிகிச்சை நேற்று முன்தினம் நடைபெற்றது. நியூயோர்க் வைத்தியசாலையைச் சேர்ந்த 16 வைத்தியர்கள் இந்த அபாயகரமான சத்திரசிகிச்சையை நடத்தினார்கள்.

பலமணிநேரம் நீடித்த இந்தச் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக அமைந்தது. குழந்தைகள் இருவரும் தனித்தனியே பிரிக்கப்பட்டனர்.

கிளாரன்ஸ், கார்ல் ஆகிரி என்ற 2 குழந்தைகளும் தனித்தனியாகப் பிரிந்துவிட்டனர். அவர்கள் இப்போது நலமுடன் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இன்னும் இரண்டு வாரங்கள் அந்தக் குழந்தைகள் வைத்தியசாலையிலேயே தங்கியிருந்து சிகிச்சை பெறுவார்கள். அதன்பிறகு அந்த 2 குழந்தைகளும் பெற்றோருடன் பிலிப்பைன்ஸ் திரும்பிவிடுவார்கள்.

# தாய்வானில் தபால்தலை கண்காட்சி

(பாங்கொக்)

தாய்வானில் உள்ள தைபே நகரில் தேசிய தபால் தலைக் கண்காட்சி தற்போது நடைபெற்று வருகிறது.

4 ஆம் திகதி தொடங்கிய இந்தத் தபால் தலைக் கண்காட்சி 9 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

அந்த நாட்டின் தலைவர்கள், சினிமா உலக கலைஞர்கள் மற்றும் முக்கிய கட்டடங்கள், வரலாற்றுச் சிறப்பை விளக்கும் காட்சிகள் அடங்கிய ஆயிரக்கணக்கான தபால் தலைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

கண்காட்சியின் தொடக்கவிழாவில் தாய்வானின் மொடல் அழகி லின்சிலிங் போஸ் கொடுத்த காட்சி.



# அல்கொய்டாவின் முக்கிய உறுப்பினர் சவுதிப் படையினரால் கைது!

சவுதி அரசாங்கத்தினால் தேடப்பட்டுவந்த அல்கொய்டா அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவரை அந்த நாட்டுப் படைகள் கைதுசெய்துள்ளதாக சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் பாரிஸ் அல் - சரானி எனவும், சவுதி அரசாங்கத்தால் தேடப்பட்டவர்களின் 26 பேரின் பட்டியலில் இவரும் ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை அல்கொய்டாவின் தலைவர்களில் ஒருவரான சரானி, கைதுசெய்யப்பட்டதாக சவுதி அமைச்சு அதிகாரி ஒருவர், அரச தொலைக்காட்சிக்குத் தெரிவிததார்.

சவுதியின் அபா மாகாணத்தில் உள்ள தேனீர்க்கடை ஒன்றில் சரானி இருந்தவேளை அவரை அடையாளம் கண்டுகொண்ட படையினர் சரானியைக் கைதுசெய்ததாக சவுதிப் படையினர் றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் சவுதிக்கான அல்கொய்டா அமைப்பின் பொறுப்பாளராக இருந்த அப்துல் அசிஷ் அல் - மொக்ரீன் கொல்லப்பட்டபின் சரானியே அந்தப் பொறுப்பில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நண்டுகள் ஓட்டப்பந்தயம்



(வொஷிங்ரன்)

குதிரைகளுக்கும், ஒட்டகங்களுக்கும். நாய்களுக்கும் ஓட்டப்பந்தயம் நடைபெறுவது போல் நண்டுகளுக்கும் ஓட்டப்பந்தயம் நடத்தப்படுகிறது. அமெரிக்காவின் நியூஜெர்சி பகுதியில் தான் இந்த நண்டுகளுக்கான ஓட்டப்பந்தயம் நடைபெறுகிறது.

அது மட்டுமன்றி நண்டுகளுக்கான அழகிப் போட்டி, அறிவுத்திறன் போட்டியும் நடக்கிறது. கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தப் போட்டிகள் நட த்தப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




விசேட உந்துகணைப் பயிற்சியை முடித்த போராளி ஒருவருக்கு தேசியத் தலைவர் சான்றிதழ் வழங்குகிறார்.



விடுதலைப் புலிகளின் விசேட உந்துகணைப் படைப்பிரிவின் அணிவகுப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது....

## 15 தமிழ் அகதிகள் மன்னாரில் மீட்பு!

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருந்த 15 தமிழ் அகதிகள் நாடு திரும்பியபோது - தலைமன்னார் உறுமலைக் கடற்பரப்பில் மணற்திட்டுக்களில் இறக்கிவிடப்பட்டு - அநாதரவான நிலையில் மீட்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் இவர்களைக் கண்டுபிடித்த கடற்படையினர் - மீட்டு வந்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## நிமோனியாக் காய்ச்சலால் 13 வயதுச் சிறுமி உயிரிழப்பு

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியிலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மூத்த விநாயகர் கோவில் வீதி - நல்லூரைச் சேர்ந்த பரணி ஜெயக்காந்தன் (13 வயது) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

சில தினங்களாக இந்தச் சிறுமி காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் இரவு சிறுமியின் நிலை மோசமடைந்ததன் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டபோது வழியிலேயே சிறுமி பரிதாபகரமாக மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிமோனியாக் காய்ச்சாலால் பீடிக்கப்பட்டே இந்தச் சிறுமி மரணமானார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (தீ)

## ஜே.வி.பியுடன் கலந்தாலோசித்தே கூட்டணித் தலைவரின் நியமனம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக் குழு தெரிவு செய்தபோதும் -

இந்த நியமனம் குறித்து ஜே.வி.பியுடன் கலந்தாலோசித்த பின்னரே ஜனாதிபதி சந்திரிகா முடிவெடுப்பார் எனத் தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை ஆளும் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா விலகியிருந்தார். இவரது இடத்துக்கே புதிய தலைவராக ரட்ணசிறி விக்ரமநாயக்கவை சிறிலங்கா சுதந்திரகட்சியின் நிறைவேற்றுக் குழு தெரிவு செய்திருந்தது.

முன்னாள் பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித் தலைவராகவும் இருந்து வரும் ரட்ணசிறி விக்ரமநாயக்கவை கூட்டணித் தலைவர் பதவியில் நியமிக்க ஜே.வி.பி. விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையிலேயே கூட்டணியின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பியுடன் கலந்தாலோசித்த பின்னரே இந்தப் பதவிக்கு யாரை நியமிப்பதென்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா தீர்மானிப்பார் என்றும் தெரியவருகிறது.

## அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அடுத்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அகில இலங்கை அரசாங்க தட்டெழுத்தாளர் சங்கம், கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடத்திய வருடாந்தக் கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

திறமையான முகாமைத்துவத்தின் கீழ் அரசசேவையை மேலும் சீராக நடத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

பொது நிர்வாகத்துக்கு துணைச் சேவை ஒன்றை அமைப்பது இந்த நடவடிக்கைகளில் ஒன்றாகும் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

## தென்னிலங்கைப் பிரமுகர்கள் நேற்று மனிதஉரிமை செயலகத்துக்கு விஜயம்!

(கிளிநொச்சி)

கொழுமபிலிருந்து கிளிநொச்சிக்கு விஜயம்செய்த குமார் ரூபசிங்க தலைமையிலான வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு மனிதஉரிமைகள் செயலக நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு மனிதஉரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. கருணாரட்ணம் அடிகளார், மனித உரிமைகள் செயலக உருவாக்கம் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக இவர்களுக்கு நீண்ட விளக்கமளித்தார்.

மேலும், வடக்கு - கிழக்கில் கடந்த காலங்களில் நடைபெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக தெற்கிலுள்ள மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை எனவும், அதற்கான வழிவகைகளை [illegible] - கிழக்கு மனிதஉரிமைகள் செயலகம் ஊடாக நடைமுறைப் படுத்தவேண்டும் எனவும் தென்னிலங்கைப் பிரமுகர்கள் கேட்டுக் கொண்டனர்.

தெற்கின் பல பெண்கள் அமைப்புக்களின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கொண்ட குழுவினர் இந்தச் செயலகத்தின் உருவாக்கத்தை வரவேற்றதுடன் கடந்த காலங்களில் நடந்த மனிதஉரிமை மீறல்களை ஆவணப் படுத்துவதுடன் தீர்வுகாணவேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

### அத்துமீறி....

சேர்ந்த இந்த மீனவர்கள் காற்றுக் கடுமையாக வீசியதால் தாங்கள் திக்குமாறி இலங்கைக் கடற்பரப்பிற்கு வரநேர்ந்ததாகத் தெரிவித்தனர்.

இதேவேளை - கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவிலும் சுமார் 80 இந்திய மீன்பிடிப் படகுகள் பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டதைக் கடற்படையினர் அவதானித்ததாகவும் படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

நேற்று இவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தபோது படகோட்டியான நான்கு மீனவர்களையும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

ஏனைய 21 மீனவர்களையும் இலங்கை கடற்படை ஊடாக இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (202)

### மட்டக்களப்பில்...

நேற்றுக்காலை களுதாவளை பஸ் நிலையத்தில் இவர் நின்றபோது மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

கொல்லப்பட்டவர் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினரான கரன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவர் இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுபவரென தாம் சந்தேகிப்பதாகவும் ; இது தொடர்பாக, தாம் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - கொல்லப்பட்டவரின் சட்டைப் பையிலிருந்த அடையாள அட்டையின்படி அவரது பெயர் பூபாலசிங்கம் - சசிக்குமார் என காணப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற பதில் நீதிவான் வினோபா - இந்திரன் சடலத்தைப் பார்வையிட்டதுடன், அதனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதன்படி - சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

### பன்னாலையில்...

குப் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லையென்றும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த நீதிபதி, நாட்டில் யாருக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் இருக்கிறது என்று கேள்வி எழுப்பினார்.

இதேவேளை இந்த முடிவைக் கொண்டு ஏனைய மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோர முடியாது என்றும், அரச சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதன்போது எதிர்த்தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த உரிமையைக் கட்டுப்படுத்த முடியாது. மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துவதைப் போன்று நீதிமன்றத்தினையும் கட்டுப்படுத்தமுடியாது. மீளக்குடியமர விரும்பிய மக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அது பற்றி நீதிமன்றம் முடிவெடுக்கும் எனவும் தெரிவித்தார்.

இடையில் குறுக்கிட்ட நீதியரசர் இதனைப்பற்றி விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும், குறித்த வழக்கின்படி திருஞானசம்பந்தரை மீளக்குடியமர அனுமதிக்கமுடியுமா என்று நீதிபதி கேட்டபோது, அரச சட்டத்தரணி அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த நபர் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர அனுமதிக்கமுடியும் என்றும், இந்தப் பகுதியில் மீளக்குடியமர்வதற்கு வேறு எந்த நபர்கள் விண்ணப்பித்தாலும் அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கமுடியும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

### விசேட...

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானு, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல துர்க்கா, கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், பொன்னம்மான் கண்ணி வெடிப் பிரிவு லெப்.கேணல் அஸ்வினி, குட்டிசிறி மோட்டார் படையணி மகளிர் சிறப்புத் தளபதி பவநிதி, படையணியின் தொடக்கப் பயிற்சி பொறுப்பாளர் கேணல் கடாபி/ஆதவன் -

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் உட்பட கட்டளைத் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

### துப்பாக்கி....

சூட்டில் காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். படுகாயமடைந்த இரவீந்திரன் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வெலிகந்தயில்...

21 வயதான மேற்படி இளைஞர் தனது வயலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே சுடபபட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வெலிகந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழீழ தேசியத் தலைவரே முதன்முதலில்....

இணக்கப்பாட்டுக்கான தீவைக் கண்டு, எமது மக்களுடைய பிரச்சினைக்களுக்கான தீர்வு காணப்படல் வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே தமிழீழத் தேசியத் தலைவர் சமாதானத்தை ஆரம்பித்துவைத்தார் என்பது கடந்தகால நிகழ்வுகளில் தெரிந்த ஒன்று.

எங்களின் சொந்த மண்ணிலே நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழுகின்ற எங்க[illegible]டைய வாழ்வுரிமையை வேண்டியே நீண்டகாலமாக எமது மக்கள் போராடி வந்தனர்.

எமது மக்கள் தமது ஜனநாயக உரிமையை வேண்டி அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர்.

இதை வன்முறை ரீதியாக நசுக்க முற்பட்டபோது - பேரழிவுகளையும், நெருக்கடிகளையும் சந்தித்தபோது அதிலிருந்து விடுபட்டுத் தற்காத்துக் கொணடு வாழ்வதற்காகத்தான் ஆயுத வழியிலான போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

1948 ஆம் ஆண்டிலிருந்து எமது மக்களும் நாமும் விரும்புவது - உரிமையோடு நாங்கள் வாழவேண்டும் என்றே.

அந்தவகையிலேயே எங்களுடைய மக்களும் தங்களுடைய உரிமையை வேண்டி நிற்கிறார்கள். இதனை தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகளும் மக்களும் விளங்கிக் கொள்வார்கள் என நாங்கள் நம்புகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சிங்கள மக்களுக்கோ அல்லது அது சார்ந்தவர்களுக்கோ தீங்கு விளைவிக்க விரும்பவில்லை.

நாங்கள் எல்லோரையும் நண்பர்களாகவே கருதுகின்றோம். எங்களுடைய மக்கள் தங்களுடைய சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற அபிலாசையோடு உள்ளனர்.

உண்மையிலேயே காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த அரசு, தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு இனவாதத்தையும், வன்முறையையும், யுத்தத்தையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டு - சிங்கள மக்கள் மத்தியிலே அது சார்ந்த தவறான வெளிப்பாடுகளை வெளிப்படுத்திக்கொண்டு தங்களுடைய ஆட்சி அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொண்டு வந்திருக்கின்றனர்.

இதனால், இன்று இந்தப் பயங்கரமான சூழல் ஏற்பட்டிருக்கிறது. இதனால் இன்றைய சமாதானச் சூழல் ஒரு நெருக்கடி நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

இதனை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் எமது தேசியத் தலைவரும், எமது தலைமைப்பீடமும் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலைப்பாட்டை சிங்கள தேசத்திடமும், சிங்கள மக்களிடமும் கூறி - தென்னிலங்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் அனைத்து தமிழ் மக்களும் அணிதிரண்டு தங்களுடைய அபிலாசைகளை நடந்த பொதுத்தோதலில் வெளிப்படுத்தியிருக்கின்றனா.

தங்களுக்கு ஒரு நிம்மதியான, நிரந்தரமான வாழ்வியலைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் தங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என இதன்மூலம் நிருபித்துக்காட்டியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

தென்னிலங்கையின் சமாதானத்துக்கான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை அரசியற்துறை நடுவப் பணியகத்தில் 3 மணிநேரம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளருடன் நடைபெற்ற இ[illegible] கலந்துரையாடலில், தென்னி[illegible]கையிலிருந்து வந்த கத்தோலிக்க திருச்சபையின் குருநாகல் ஆயர், சேர்த் செவென அறக்கட்டளையின் கலேப்பிட்டிய பேமரத்தின தேரர், பௌத்தபிக்குகளின் அறக்கட்டளையகத்தைச் சேர்ந்த போகமண்ண தர்சிகா தேரணி, ஒறுதொட்ட தர்ணயந்தி தேரணி மற்றும்

மகா கல் கடவல புன்ன சார தேரர், சுவர்ணா அறக்கட்டளையின் சுவர்ணா மல்லவராச்சி, பெண்கள் வணிகச் சம்மேளனத்தின் ராணி ரட்நாயக்கா, தொழிற்சங்கப் பிரதிநிதிகளான ரவி குமுதேஸ், சமன் ரட்ணப்பிரிய.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேட்டி ரணவீர, மக்கள் சமாதான அவையின் ஆசாஜி தேரர், கலாநிதி குமார் ரூபசிங்க, ஹர்ச குமார நவரட்ண, கலாநிதி திஸ்ஸபுன்ன தேரர், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு குமார் இலங்கசிங்க, தேசிய பாதுகாப்புச்சபையைச் சேர்ந்த பால கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2004 க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை இணையத்தளம் மூலம் பார்வையிடலாம்.
அருள் கொமினிக்கேசன்
T.P 222 3536
222 3615
இல.01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.